

Vol.27 | No. 8 | August 2023
The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்



St. Thomas Church Palugal,
New Church Consecratoin, 01.07.2023




Catechism Anniversary, 16.07.2023, Kalluvilai



St. Michael's Church, Thettivilai,
Foundation Stone Blessing, 03.07.2023



St. Thomas Church, Muzhucode,
First Holy Communion and Parish Feast, 04.07.2023



St. James Church, Mankarai,
First Holy Communion, Parish Feast, 29.07.2023

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 27 No :08 AUGUST 2023



# இறையருள்
# IRAIARUL

## உள்ளே...


| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| உயர் பேராயர் சுற்றுமடல் | 07 |
| மறைக்கல்வி | 13 |
| இளையோர் இயக்கம் (SMYM) | 17 |
| இல்வாழ்வு இயக்கம் | 20 |
| வின்சென்ட் தே பவுல் சங்கம் | 22 |
| கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் | 24 |
| நலவாழ்வு பணிக்குழு | 26 |
| அருட்சகோதர்களிடமிருந்து | 27 |
| புலரி சமூக சேவை சங்கம் | 28 |
| அருட்பணிபேரவை | 30 |
| மறைமாவட்ட செய்திகள் | 35 |
| மறைவட்ட செய்திகள் | 38 |
| MONTHLY AGENDA - August 2023 | 47 |
| BISHOP'S ENGAGEMENTS | 48 |



## Editorial Board

Patron

**His Excellency**

**Mar George Rajendran SDB**

Chief Editor

**Fr. Joseph Santhosh**

Associate Editors

**Mr. Edwinson**

**Mr. Iyathurai**

**M.R.Merin Sujith**

Published by:

**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

DTP & Design

**M.R.Merin Sujith**

Printed at

**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests/GR/148/2023**

**31 July 2023**

**Dear Readers,**

Greetings from Los Angeles, USA!

As we are celebrating the feast of St John Mary Vianney, patron of all priests, especially the diocesan priests. In the context of our presbyterium, I want to reflect with you on the importance of priests living and working together as a close-knit group. Solidarity among priests is crucial in living out the priestly commitment to carry out the pastoral ministries that they are entrusted with.

According to a survey that Eugene Kennedy carried out on Catholic priests, it was found that many priests lack healthy interpersonal relationships. They are uneasy about intimacy. It simply refers to responsible closeness with other people. Among the priests, we can speak of spiritual intimacy. It is one of the most important challenges of adult life. It is something that can only be handled by a person who has worked through the adolescent challenge of securing his own identity.

Many priests have a few people to whom they are close. Only some people have enabled them to express themselves fully. This is a real problem because relationships with people and fellow priests constitute such a substantial part of their ministry. These priests experience difficulty and discomfort in the very area that should be a deep source of personal satisfaction. For a more rewarding sense of pastoral and emotional satisfaction, priests should feel confident and open in their dealings with people and other priests. Some priests feel that, in principle, they should remain at a distance from other people.

Intimacy, friendship, and love are powerful human needs. Somewhere in the deep recesses of our beings, we all hunger for them. Though this hunger is built into us from the beginning, we

will experience it more acutely in our priestly lives. Intimacy implies being fully at home with someone. It means letting myself be fully known without fear of rejection. It means responding to another's love by revealing myself completely, trusting that the other will love me as I am. It means being fully known and lovingly appreciated. This kind of intimacy, which we call spiritual intimacy, is very important among priests. An American Jesuit, Fr William Bier, did extensive studies on priests who had left the ministry. He found that the majority of the priests who left ministry were lonely, isolated people who had very few close relationships with other priests. Fr Bier believes that intimate spiritual relationships among priests are a great support for their vocational commitment.

All of us need a support system in our lives. In the past, the joint family system provided this support. Today, families have become smaller and more isolated. Nobody has time for others. When a person is in trouble, there is nobody to help him. The alarming number of suicides is a painful manifestation of this problem. Hence, each person must have a small group of people with whom he can confide his problems and seek support. It is a kind of intimate support system. This is loving behaviour manifested through selfdisclosure and genuine care and concern. This intimate support system does not develop quickly or easily. It grows slowly as thoughts and feelings are shared. It deepens as others are invited to enter the personal and intimate places of our lives.

Priests need priests. A priest cannot function properly without the spiritual and psychological support of his fellow priests. A priest can give emotional support to his fellow priests in many ways. In our diocesan and religious communities, many priests are old, sick, or disabled. They experience extreme loneliness in these situations. The fellow priests can support them and comfort them by visiting them and listening to their problems. Also, there may be priests who are going through a crisis of vocation. In this kind of crisis, fellow priests are the most apt people to guide and support them.

Thomas Merton, a great mystic and spiritual author, went through a very serious vocational crisis at the age of 52. He was deeply involved in a love affair with a 25-year-old nurse. In this crisis period, a young priest provided him with the spiritual and

psychological support he needed. Thomas Merton was a great scholar and a saintly person. But he had the courage and humility to share his very intimate problems with another priest who was much younger than himself. In their difficulties, priests should be humble enough to open up their problems to fellow priests and seek their support and guidance. Only a priest can understand another priest's problems clearly.

Hence, all of us must have special friends within the greater bosom of our presbyterate, or whatever group God has placed us in. A large community can effectively love its members with the special love and support they need only through the mediation of these special friends between individuals or among members ofsmaller groups, such as the seminary batch. Hence, members of the presbyterate should be bound together in deep ties of friendship.

St Gregory the Great indicates that no one should be sent out on apostolic work until he is capable of true love for his fellow priests. He writes: "Dear Brothers, our Lord sends his disciples to preach two by two. In doing so, he silently indicates to us that should anyone not love his companion, he should by no means take upon himself the office of preaching."

Abraham Maslow held that each person should be linked closely with a few others, each of whom is linked with still another few, and thus the whole web of love is closely knit together. The quality and depth of love in the whole fabric of the community are dependent upon the high quality of each friendship. When the friendship is based on the priestly bond, it becomes an apostolic covenant in which priests work together as friends for the salvation of others and thus bring about love among the many.

If we are to advance in our spiritual lives, we need to have intimate friends in the Spirit. Priests need close spiritual friendships in which they can find spiritual nourishment through shared meditations, shared prayers, etc. Many saints had close friendships with other saints. Some examples of spiritual friendship are that of St John of the Cross and St Theresa of Avila, St Francis de Sales and St Jane Frances, St Catherine, and Bl. Raymond.

How can we develop healthy friendships among priests, especially

among the priests in our Eparchy? Since our Eparchy covers vast areas, priests cannot come together often, especially those in the mission territories. However, we have monthly recollection and meetings of priests, regular meetings with the priests working in the mission territories, Forane priests gathering, etc. These meetings and other moments of togetherness should be well utilised to bring people closer to one another. The common meals that we often have should help foster healthy friendships.

Likewise, as priests of the eparchy, we have several common celebrations, such as birthdays and feast days of individual priests, parish and institutional feasts, etc. They can be arranged in such a way that many can take part. This is because celebrations are communal experiences of joy and moments of thanksgiving. We celebrate the fact of being together, and we give thanks for the gifts we have been given. Celebrations nourish us, restore hope, and give us the strength to live with the frustrations and difficulties of daily life. We should not shy away from meaningful and legitimate forms of celebration that can engender fellowship.

Intellectual sharing among priests is also important. Often, priests do not get sufficient time for personal study. Often, they are not in touch with modern trends in theology, psychology, etc. To overcome this problem, priests could gather together occasionally and study and discuss current issues, or they could invite some experts to enlighten them.

Friendly corrections can be another way to strengthen the bonds of friendship among priests. Speaking about friendship, Erich Fromm says that one of the essential elements of friendship is the responsibility for the well-being of the other. Friendship is based on mutual commitment. If friends are committed to one another, they have a responsibility to point it out if one of them goes wrong. Priests are committed to each other through the bond of the common presbyterate. If a priest comes to know that certain behaviours of a fellow priest are contrary to his vocation, he should lovingly point them out to him. Many serious problems could be avoided through timely corrections.

Thus, on 4 August when we celebrate Diocesan Priest Day, let us

learn to cultivate intimate spiritual friendships with those who are called to the same vocation by the Lord. The lives and ministries of the priests should overflow with joy at seeing the wonders that the Lord is working on their loved ones.

We just concluded the celebration of the feast of St Alphona. I want to thank you, dear Fathers, for celebrating the feast with nine days of the novena in your respective parishes and institutions. The celebrations on 30 July at St Alphonsa Shrine, Nagercoil, went off well. Thank you for sending the faithful and for taking part in all the events in the Shrine. We have now entered the month of August. This month offers us several feasts, not only for celebration but also for our edification. On 4 August we mark John Maria Vianney Day. As per our custom, all the priests of the Eparchy normally gather at the Minor Seminary for the celebration. I request that every one of you participate in the programme. Besides the feast of St John Mary Vianney, on 15 August, we shall celebrate the twin festivals of the Assumption of our Blessed Mother Mary and the Independence of our beloved motherland. The assumption is an expression of our deep faith because we believe in the real, physical elevation of the sinless soul and incorrupt body of our Mother Mary into heaven. 15 August also marks the independence that we obtained from England after years of struggle. On this day, let us pray for the well-being of our country and ask Mother Mary to intercede for us so that we become free from every form of bondage and be with her one day in heaven. Let us pray, in particular, for peace in the northeastern State of Manipur, which is reeling under the communal frenzy that has taken the lives of innocent people and destroyed properties causing untold miseries to the people. We remember our fellow Christian brothers and sisters who are bearing the brunt of the mayhem that was unleashed some months ago.

With my prayers and blessings,

Yours in Christ Jesus,
☨ George Rajendran SDB

Bishop of Thuckalay

**George Cardinal Alencherry**
**Major Archbishop**
**Syro - Malabar Church**

**Prot. No.0611/2023**

## மேய்ப்பு மடல்

## *திருஅவை நாள் (துக்றானா) ஜூலை 2023*

**சீரோ மலபார் திருச்சபையின் உயர் பேராயர் கர்தினால் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி தனது உடன் பணியாளர்களான பேராயர்களுக்கும் ஆயர்களுக்கும் அருட்பணியாளர்களுக்கும் துறவறத்தாருக்கும் தனது மேய்ப்பு பணியின் கீழ்தரப்பட்டுள்ள எல்லா இறைமக்களுக்கும் எழுதுவதாவது, ஆண்டவரின் அருள் உங்களோடு இருப்பதாக.**

**ஈசோ மெசிகாவில் அன்புமிக்க சகோதர சகோதரிகளே!**

நம் தந்தையாம் மார்தோமாவின் துக்ரானாத் திருநாள், திருச்சபை நாளாக கடந்த வருடங்களைப் போன்று இவ்வாண்டும் கொண்டாடுகிறோம். "நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!" என்ற தோமாவின் நம்பிக்கை அறிக்கையும், அவர் மேற்கொண்ட திருத்தூதுப் பயணமும், நம்பிக்கையை வாழ்வாக்கிய மறைசாட்சியமும். நமது நம்பிக்கையின் மூலைக்கல்லாக இருக்கிறது. மீட்பின் நற்செய்தியை இந்தியாவில் பறைசாற்ற மார் தோமவைத் தெரிந்தெடுத்த இறைவனுக்கு நன்றி கூறவும், அவரது சான்று வாழ்விலிருந்து ஆற்றல் பெற்றுக் கொண்டு இன்றைய காலகட்டத்தின் சவால்களை நெஞ்சுறுதியோடு எதிர்கொள்வதற்கான ஆற்றலைப் பெறவும் இவ்வாண்டைய கொண்டாட்டம் உதவட்டும். இதற்கு வழிகோலும் சிலவற்றை இச்சுற்றுமடல் வாயிலாக பகிர்ந்துகொள்ளலாம் என ஆசிக்கின்றேன்.

கிபி 72 இல் சென்னையிலுள்ள சின்னமலையில் மார்தோமா இரத்த சாட்சி ஆனதன் 1950 ஆம் நினைவு, கடந்த வருட துக்ரானாத் திருநாளின் மையச் சிந்தனையாக இருந்தது. திருச்சபையின் பலமட்டங்களில் அதை நாம் கொண்டாடினோம். 1923 இல் ஏற்படுத்தப்பட்ட சீரோமலபார் உயர்பேராயத்தின் நூற்றாண்டு நினைவு இந்த ஆண்டு துக்ரானாத் திருநாளின் மையச்சிந்தனையாகத் திகழ்கிறது. மார்தோமாவின் நற்செய்தி பணியால் உருவெடுத்த இத்திருச்சபை தொடக்க காலங்களில் நம் மண்ணின் மரபுகளுக்கேற்ப வளர்ந்து வந்தது.

16 ஆம் நூற்றாண்டில் கூட்டப்பட்ட உதயம்பேரூர் திருச்சங்கத்தின் விளைவாக ஏற்பட்ட சவால்களின் பயனாக 'கூனன்குரிசு உறுதிமொழி' என அறியப்படும் நிகழ்வு நடந்தது. இல் அப்போது, தாய்த் திருச்சபையோடு ஒன்றித்து நிற்க நம்மால் இயன்றது. 1887 திருத்தந்தை 13 ஆம் லியோ சுரியானி கத்தோலிக்க விசுவாசிகளை இலத்தீன் சபையிலிருந்து பிரித்து சீரோமலபார் விசுவாசிகளுக்காக திருச்சூர், கோட்டயம், என்னும் மறைவட்டங்களை உருவாக்கினார். 1896 இல் திருச்சூர் கோட்டயம் மறைவட்டங்களிலிருந்து எர்ணாகுளம் என்னும் மறைவட்டம் உருவாக்கப்பட்டதோடு, கோட்டயம் மறைவட்டம் சங்ஙனாசேரி என பெயர் மாற்றமும் செய்யப்பட்டது. திருச்சூர், எர்ணாகுளம் மற்றும் சங்ஙனாசேரி மறைவட்டங்களுக்கென மண்ணின் மைந்தர்கள் ஆயர்களாக நியமிக்கப்பட்டார்கள். 1911 ஆம் ஆண்டு கினானாய சமூகத்திற்காக கோட்டயம் மறைவட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்தைகய சபைசார்ந்த அதிகார கட்டமைப்புகளின் நிறைவாக, 1923 டிசம்பர் 21 ஆம் தேதி, திருத்தந்தை பதினொன்றாம் பயஸ் அவர்கள், திருச்சூர், எர்ணாகுளம் மற்றும் சங்ஙனாசேரி மறைவட்டங்களை மறைமாவட்டங்களாக உயர்த்தி சீரோ மலபாருக்கென தனி அதிகார அமைப்பை ஏற்படுத்தினார். நம்முடைய தனித்திருச்சபை வரலாற்றின் ஒப்பற்ற இந்நிகழ்வின் நூற்றாண்டை நாம் இவ்வாண்டு அனுசரிக்கிறோம்.

தொடர்ந்து வந்த காலங்களில் நம்முடைய திருச்சபையின் வளர்ச்சியை துரிதப்படுத்தும் நடவடிக்கைகளை திருத்தந்தையர்கள் மேற்கொண்டனர். 1956 இல் சங்ஙனாசேரி, உயர்மறைமாவட்டமாக உயர்த்தப்பட்டது. கேரளாவிலும், கேரளாவிற்கு வெளியேயும் பல புதிய மறைமவாட்டங்கள் உருவெடுத்தன. 1990 ஆம் ஆண்டு செயல்பாட்டிற்கு வந்த கீழைத் திருச்சபையின் திருச்சட்டத்தின்படி 1992 டிசம்பர் 16 ஆம் தேதி புனித இரண்டாம் ஜாண் பால் திருத்தந்தை சிரோமலபார் திருச்சபையை தனிதிருச்சபையாக அறிவித்து உயர்பேராய நிலைக்கு உயர்த்தினார். முதல் உயர்பேராயராக மார் ஆன்றனி படியற அவர்களை நியமித்தார். அதன்பின் 1995 ஆம் ஆண்டு திருச்சூர் தலசேரி மறைமாவட்டங்கள் உயர்மறைமாவட்டங்களாக உயர்த்தப்பட்டன. இந்தியாவிற்கு வெளியேயும் பல மறைமாவட்டங்கள் உருவானது. 2017 ஆம் ஆண்டு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் சீரோமலபார் திருச்சபையின் பணித்தள எல்லையை இந்தியா முழுவதற்குமாக விரிவுபடுத்தியதோடு மேய்ப்பு மற்றும் நற்செய்தி

பணிக்கான உரிமையை சீரோமலபார் திருச்சபைக்கு வழங்கவும் செய்தார். இவ்வரலாற்று நிகழ்வு பொன்எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். கடந்த நூறு ஆண்டுகால திருச்சபையின் உழைப்பின் பயனாய் சீரோமலபார் திருச்சபைக்கென இந்தியாவில் 31 மறைமாவட்டங்களும் இந்தியாவிற்கு வெளியே 4 மறைமாவட்டங்களும் ஒரு திருத்தூது பகுதியும் உள்ளன. இவ்வரிய வளர்ச்சியை எண்ணி இறைவனுக்கு நன்றி செலுத்துவோம். மேலும் இச்சபை ஆன்மீகத்திலும் ஒற்றுமையில் சிறந்தோங்கி நிற்பது குறிப்படத்தக்கது. ஆயர்கள், குருக்கள், துறவியர் பொதுநிலையினர் ஆகியோரின் உழைப்பினால் திருச்சபை இந்நிலையை அடைந்திருக்கிறது. 2023 ஜூன் மாதம் கூடிய ஆயர் பேரவை திருச்சபையின் வளர்ச்சிக்கெனப் புதிய திசையைக் காட்டியிருக்கிறது. இதில் எடுக்கப்பட்டத் தீர்மானங்கள் மேய்ப்புபணிகளை வலுப்படுத்தவும் ஒருமுகப்படுத்தவும் வழிவகுக்கும். இத்தீர்மானங்கள் திருத்தந்தையின் ஒப்புதலோடு செயல்பாட்டிற்கு வரும்பொழுது நம்முடைய திருச்சபை புதியவரலாறு படைக்கும் என்பதில் ஐயம் இல்லை. இறைபராமரிப்பில் நம்பிக்கைக் கொண்டும், தொன்மைமிக்க மரபுகளை பற்றிக் கொண்டும் இணைந்து பயணிப்போம்.

அனைத்துலக திருச்சபையில் அங்கம் வகித்து தனித்திருச்சபையாக வளரும்போது திருத்தந்தையோடு இணைந்து ஆயர்களும் குருக்களும், துறவியர்களும், பொதுநிலையினர்களும் பணிவுடனும் ஒற்றுமையோடும் செயல்பட வேண்டும். நமது திருச்சபையின் இணைந்து இயங்கும் தன்மையை அனைத்து நிலைகளிலும் செயல்படுத்த முயல்வோம். இணைந்து பயணித்தல் என்னும் சொல்லாடல் வழியாக, ஒருமித்தச் சிந்தனை மற்றும் செயல்பாடு ஆகியவற்றை திருத்தந்தை வலியுறுத்துகிறார். கேரளாவில் தோன்றிய சீரோ மலபார் திருச்சபை இன்று இந்தியா மட்டுமல்லாது உலகின் பல்வேறு பகுதிகளிலும் பரவி ஒளி வீசுகிறது. இன்று கேரளாவிலிருந்து வெளியூர்களுக்கு பள்ளிப்படிப்பை முடித்து உயர்க்கல்வி மற்றும் வேலைக்காக ஏராளமான இளையோர்கள் படையெடுக்கின்றனர். புலம்பெயர்ந்தவர்களுக்கு ஆன்மீகத்தை ஊட்டுவதற்காக அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் மறைமாவட்டங்களும் ஐரோப்பியாவில் திருத்தூதுபணிக்களும் உருவாக்கப்பட்டுள்ளன. இத்தகைய மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்காக அவர்களின் சொந்த மறைமாவட்டங்களும் வெளிமறைமாவட்டங்களும்

இணைந்து பல்வேறு ஆக்கப்பூர்வமான திட்டங்களை வகுப்பது காலத்தின் கட்டாயம். வெளிநாடுகளில் வாழ்வோர் தாய்த்திருச்சபையின் மரபுகளையும், மாண்பினையும் கட்டிக் காப்பதோடு வழிபாட்டு முறைகளை கடைபிடிக்கவும் பின்பற்றவும் இளைய தலைமுறைக்கு கற்றுக்கொடுக்கவும் வேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

கிறிஸ்தவர்களாக வாழ்வதில் இன்று சமூகம் சந்திக்கின்ற சவால்களைப் பற்றி பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். கிறிஸ்தவர்களும் கிறிஸ்தவ நிறுவனங்களும் இன்று எதிர்கொள்ளும் பிரச்சனைகள் ஏராளம் ''நீங்கள் உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள்" (மாற்கு 16:15) என்ற இறைக்கட்டளையை கடைபிடிக்க ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் கடமையுள்ளவர்கள். திருச்சபையின் எதிர்காலம் நற்செய்தி பணியை சார்ந்தே இருக்கிறது. நற்செய்தி பணியால் ஈர்க்கப்பட்ட ஒருவரை யாராலும் தடுக்க இயலாது. ஏனெனில் இது மனித விருப்பத்திற்கு அப்பாற்பட்ட ஓர் இறைதிட்டம். யோவான் நற்செய்தியில் கூறுவது போல ''என்னை தந்தை ஈர்த்தாலொழிய எவரும் என்னிடம் வர இயலாது" (யோவான் 6:44) துன்பங்களும், துயரங்களும் உண்மையான நம்பிக்கையாளர் ஒருவரை ஏற்ற நம்பிக்கையிலிருந்து விலகச் செய்யாது. நற்செய்திக்காக ஏராளமான துன்பங்களைத் தாங்கிக்கொண்ட தூய பவுலடியாரின் வார்த்தைகள் இதை உறுதிப் படுத்துகின்றன. அவர் கூறுகிறார், "ஏனெனில், சாவோ, வாழ்வோ, வானதூதரோ, ஆட்சியாளரோ, நிகழ்வனவோ, வலிமை மிக்கவையோ உன்னதத்தில் உள்ளவையோ. ஆழத்தில் உள்ளவையோ, வேறு படைப்போ நாம் ஆண்டவர் கிறிஸ்து இயேசுவின் வழியாய் அருளப்பட்ட கடவுளின் அன்பிலிருந்து நம்மை பிரிக்கவே முடியாது என்பது என் உறுதியான நம்பிக்கை" (உரோமையர் 8:38-39).

லிபியா நாட்டில் 21 கிறிஸ்தவ இளையோர்கள் ISIS தீவிரவாதிகளால் கழுத்து அறுக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டார்கள். அவர்கள் கிறிஸ்துவுக்கு சாட்சியாயினர். இதுபோல் ஈராக், சிரியா மற்றும் உலகின் பல பகுதிகளிலும் நமது நாட்டின் வடஇந்திய பகுதிகளிலும் குறிப்பாக தற்பொழுது மத துன்புறுத்தலுக்கு ஆளாகியிருக்கின்ற மணிப்பூரிலும் வாழுகின்ற மக்கள் கிறிஸ்தவ நம்பிக்கை என்பது இவ்வுலக துன்பங்களாலும், துயரங்களாலும் மடிந்துபோகக் கூடியது அல்ல என்பதை நிருபித்து காட்டியிருக்கிறார்கள். திட்டமிட்ட வன்முறை, நியாயப்படுத்த இயலா சீண்டல்கள், மற்றும் தாக்குதல்கள் ஆகியவை ஏற்படும் போது, பொது சமூகத்தின் நலனையும்

மேம்பாட்டையும் மனதில் நிறுத்தி திருச்சபையின் பணிகளை முன்னெடுப்பதில் நமக்கு எவ்விதச் சோர்வும் ஏற்படக் கூடாது. இத்தகைய சூழலில் மனம் தளர்ந்து போகாமல் நம்பிக்கையை காத்துக்கொண்டு அன்புடனும், பரிவுடனும் கிறிஸ்தவ வாழ்க்கை வாழவும் அன்றாட வாழ்க்கை சூழலில் சான்று பகரவும் நம்மால் இயலட்டும். நமக்கு எதிராக செயல்படுவோரிடம் இரக்கம் காட்டுவதே கிறிஸ்தவத்தின் முதன்மை நெறியாக விளங்குகிறது.

நமது நிறுவனங்கள், பக்த இயக்கங்கள் மற்றும் பல்நோக்கு அமைப்புகள் ஆகியவற்றில் நிலவும் குறைகளைக் களைந்து எல்லாநிலைகளிலும் மிகுதியான கனிகொடுக்க நாம் தனிக்கவனம் செலுத்த வேண்டும். இது காலத்தின் கட்டாயம்.

தன் வாழ்வு பணி மற்றும் மறைசாட்சியத்தின் வழியாக நமக்கு முன்மாதிரி காட்டிச் சென்ற மார் தோமாவைப் பின்பற்றி நாமும் நம்பிக்கையின் ஒளிச்சுடராவோம். ''உலகில் உங்களுக்கு துன்பம் எனினும் துணிவுடன் இருங்கள் நான் உலகின் மீது வெற்றி கொண்டுவிட்டேன்.'' (யோவான் 16.33) என்ற கிறிஸ்துவின் வார்த்தைகள் நமக்கு வழித்துணையாகட்டும். துக்ரானாத் திருநாள் மற்றும் சபைநாள் நல்வாழ்த்துக்களை அனைவருக்கும் உரித்தாக்குகிறேன். அன்னையாம் தூய மரியா, தூய யோசேப்பு, மார் தோமா மற்றும் அனைத்து புனிதர்கள் அருளாளர்கள் ஆகியோரின் பரிந்துரையும் வேண்டுதலும் உங்கள் உங்கள் அனைவரோடும் இருப்பதாக.



✠ *ஜார்ஜ் கர்தினால் ஆலஞ்சேரி*

*சீரோ மலபார் திருச்சபையின் உயர் பேராயர்*

---

இச்சுற்றுமடல் 2023 ஜுலை 2-ம் தேதி சீரோமலபார் சபையின் எல்லா பங்குகள் நிறுவனங்கள் மற்றும் பயிற்சி நிலையங்களில் திருப்பலிக்கு இடையே வாசிக்க வேண்டும்.

## மறைமாவட்ட கூரியா செய்திகள்

அருட்தந்தை றோபின் ஜோஸ் அவர்கள் மறைமாவட்ட அனைத்து பொறுப்புகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அருட்தந்தை ஜெஸ்டின் செறுவேலில் அவர்கள் 2023 ஜூலை 5 முதல் மறைபரப்பு தள பொருளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அருட்தந்தை ஷிஜோ ஐக்கரகுந்நேல் அவர்கள் 2023 ஜூலை 5 முதல் மஞ்சாலுமூடு மறைவட்ட இறையழைத்தல் இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அருட்தந்தை சுபின் ஸ்கரியா அவர்கள் 2023 ஜூலை 5 முதல் மஞ்சாலுமூடு மறைவட்ட SMYM இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

திருத்தொண்டர் லிஜு மாற்றுகளம் அவர்கள் 2023 ஜூலை 5 முதல் Thuckalay Tidings என்ற மின்னிதழின் மறைமாவட்ட பொறுப்பாசிரியராக செயல்படுவார்.

## ஆழ்ந்த இரங்கல்கள்

*தக்கலை மறைமாவட்டத்தில் சுமார் 12 ஆண்டுகள் பணியாற்றிய அருட்சகோதரி ஆன் மேரி SH (78), 2023 ஜூலை 13 அன்று நிரந்தர ஓய்விற்கு அழைக்கப்பட்டார்.*

*தக்கலை மறைமாவட்டத்தில் சுமார் 13 ஆண்டுகள் பணியாற்றிய அருட்சகோதரி ஆனி ஜேம்சன் SH, 2023 ஜூலை 14 அன்று நித்திய இல்லத்திற்கு அழைக்கப்பட்டார்.*

*இரு அருட்கன்னியர்களை இழந்த மேத்யூ மாகாணத்திற்கு இரங்கல் மற்றும் ஆழ்ந்த செபங்களை மறைமாவட்டம் சார்பாக தெரிவித்துக்கொள்கிறோம்.*




"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்."
(மாற் 16:15)

*"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்"*
*[மாற்கு 16:15]*

அனைவருக்கும் அன்பின் நல்வாழ்த்துக்கள்!

**ஊக்குவிப்பாளர்களின் கூட்டம்**

மறைமாவட்ட மறைக்கல்வி ஊக்குவிப்பாளர்களின் கூட்டம் 2023 ஜூலை 8 சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கல்லுவிளை நற்செய்தி நிலைய அலுவலகத்தில் குருகுல முதல்வர் பேரருட்தந்தை. தோமஸ் பவத்துபறம்பில் அவர்கள் தலைமையிலும் இயக்குநர் அருட்தந்தை. அபிலாஷ் அவர்களின் முன்னிலையிலும் துய ஆவிப்பாடலுடன் ஆரம்பமானது. இயக்குநர் தந்தை அவர்கள் வரவேற்றுப் பேசினார். மேலும் இயக்குநர் தந்தை அவர்கள் ஊக்குவிப்பாளர்கள் மறைக்கல்வியைப் பற்றி தெரிந்துக்கொள்ள வேண்டும் என்றும், இந்த வருடம் நடக்க வேண்டிய செயல் திட்டங்கள் பற்றியும் உரையாற்றினார். குருகுல முதல்வர். பேரருட்தந்தை தோமஸ் பவத்துபறம்பில் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். தொடர்ந்து எரியும் மெழுகுவர்த்தி கையில் ஏந்தி மறைக்கல்வி ஊக்குவிப்பாளர்களுக்கான வழிபாட்டு நிகழ்வு மற்றும் உறுதிமொழி நடைபெற்றது. குருகுல முதல்வர் புதிதாக பொறுப்பேற்றுள்ள ஊக்குவிப்பாளர்களுக்கு அதற்கான நியமன ஆணை



வழங்கினார். இக்கூட்டத்தின் போது ஊக்குவிப்பாளர்கள் பார்வையிட வேண்டிய மறைக்கல்வி நிலையங்களின் பெயர் மதிப்பீடு படிவங்கள் போன்றவை வழங்கப்பட்டது. இக்கூட்டத்தின் போது அனைத்து ஊக்குவிப்பாளர்களும் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர். மாலை 5.00 மணியளவில் செபத்துடன் கூட்டம் முடிவுற்றது. அனைவருக்கும் தேனீர் வழங்கப்பட்டது.

**2023 - 2024 ஆம் மறைக்கல்வி ஆண்டு புதிய ஊக்குவிப்பாளர்கள்:**

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு. எட்வின்சன் | - | பாலப்பள்ளம் |
| 2 | திரு. சோணிக் ரீகன் | - | தக்காளிவிளை |
| 3 | திரு. ஜாண் பிறைட் | - | பிலாங்காலை |
| 4 | திரு. ஜெயசிங் | - | வாறுதட்டு |
| 5 | அருட்சகோதரி அல்போன்சா CMC | - | தக்கலை |
| 6 | திரு. விஜய ராஜன் | - | மஞ்சாலுமூடு |
| 7 | திரு. விஜய குமார் | - | மஞ்சாலுமூடு |
| 8 | திரு. ஜோஸ் | - | மாலைக்கோடு |
| 9 | திரு. தினேஷ் | - | பள்ளிக்கோணம் |

**மறைக்கல்வி ஆண்டுவிழா**

2022 – 2023 – ஆம் ஆண்டின் மறைக்கல்வி ஆண்டுவிழா 2023 ஜுலை 16 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கல்லுவிளை ஆசீர் அரங்கில் நடைபெற்றது. மறைமாவட்ட குருகுல முதல்வர். பேரருட்தந்தை. தோமஸ் பவத்துபறம்பில் அவர்கள் தலைமை தாங்க குழித்துறை மறைமாவட்ட அருட்தந்தை ஜெரால்டு மற்றும் இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் அவர்கள் முன்னிலை வகித்தனர். நிகழ்வின் துவக்கமாக வயலங்கரை மறைக்கல்வி மாணவர்கள் இறைவணக்க நடனம் ஆடினர். தொடர்ந்து இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் அவர்கள் வரவேற்று உரை நிகழ்த்தினார். தொடர்ந்து குருகுல முதல்வர் அவர்கள் குத்து விளக்கேற்றி ஆண்டுவிழாவை துவக்கி வைத்தார். மேலும் மறைக்கல்வி ஆசிரியராக பணியாற்றி 25 மற்றும் 40 வருடங்கள் ஜுபிலி கொண்டாடும் ஆசிரியர்கள் மற்றும் ஊக்குவிப்பாளை திரு. விஜயராஜன் அவர்கள் வாழ்த்தி அறிமுகம் செய்து வைக்க குருகுல முதல்வர் பேரருட்தந்தை அவர்களால் பொன்னாடை போர்த்தி நினைவுப்பரிசு வழங்கப்பட்டது. தொடர்ந்து இவ்வருடத்திற்கான மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான கையேடு குருகுல முதல்வர் பேரருட்தந்தை அவர்கள் வெளியிட அருட்சகோதரி. ட்ரீசா ஜோஸ் அவர்கள் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து குழித்துறை மறைமாவட்ட அருட்தந்தை ஜெரால்டு அவர்கள் அனைவரையும் வாழ்த்தி உரை நிகழ்த்தினார். பின்னர்

குருகுல முதல்வர் அவர்கள் ஜூபிலி கொண்டாடும் ஆசிரியர்களையும் மற்றும் அனைவரையும் வாழ்த்தி மாணவர்கள் விசுவாசத்தில் ஆழப்படுத்த ஆசிரியர்கள் மறைக்கல்விப்பணியை தொய்வின்றி முழுமையாக முன்னெடுக்க வேண்டும் என்றும் கூறினார். விழாவின் இடையிடையே பல்வேறு மறைக்கல்வி நிலையங்களிலிருந்து கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றது. தொடர்ந்து மறைமாவட்ட விவிலிய வினாடி - வினாப் போட்டி மற்றும் போட்டித் தேர்வில் பரிசு பெற்ற மாணவர்களுக்கு பரிசுத்தொகையும் சான்றிதழ் வழங்கப்பட்டது. மேலும், மறைமாவட்ட அளவில் 2022-23 ஆம் ஆண்டு A,B,C பிரிவு அடிப்படையில் முதல் மூன்று இடங்களை பெற்ற மறைக்கல்வி நிலையங்களுக்கு சுழற்கோப்பை வழங்கப்பட்டது. ஊக்குவிப்பாளர் திரு. ஜாண் பிறைட் அவர்கள் நன்றி கூறினார். இறுதியில் பாப்பரசர் கீதத்துடன் ஆண்டு விழாவானது நிறைவுபெற்றது. பின் அனைவருக்கும் தேநீர் விருந்து வழங்கப்பட்டது

**2022-2023 ஆம் மறைக்கல்வி ஆண்டு சிறந்த மறைக்கல்வி நிலையங்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மறைக்கல்வி நிலையங்கள்**

| Rank | Centre | Points |
|---|---|---|
| **SECTION A** | | |
| I | JAYAMATHA SUNDAY SCHOOL , NITHIRAVILAI | 239 Points |
| II | HOLY FAMILY SUNDAY SCHOOL , MUKKUTTUKAL | 219 Points |
| III | HOLY CROSS SUNDAY SCHOOL , MALAICODE | 216 Points |
| **SECTION B** | | |
| I | DEVA MATHA SUNDAY SCHOOL , KILLIYOOR | 206 Points |
| II | ST. MICHEAL SUNDAY SCHOOL , KATTATHURAI | 198 Points |
| III | ST. MARTIN DE PORES SUNDAY SCHOOL, KAZHUVANTHITTAI | 196 Points |
| **SECTION C** | | |
| I | HOLY FAMILY SUNDAY SCHOOL , ARUKANY | 254 Points |

| | | |
|---|---|---|
| II | ST. THOMAS SUNDAY SCHOOL , PATHUKANY | 189 Points |
| III | ST. MOTHER THERESA SUNDAY SCHOOL , KALLUVILAI | 172 Points |

**நன்றிகள்**

மறைக்கல்விப் பணிக்காக முழுமையான ஒத்துழைப்பு தருகின்ற அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், ஊக்குவிப்பாளர்கள், தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் இறைமக்கள் அனைவருக்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றிகள்.

**வாழ்த்துக்கள்**

25 மற்றும் 40 வருடங்கள் மறைக்கல்வி ஆசிரியராக பணியாற்றி இந்த வருடம் வெள்ளி விழா மற்றும் ரூபி விழா கொண்டாடும் அனைத்து ஆசிரியர்களுக்கும் மனமார்ந்த வாழ்த்துக்களும் நன்றிகளும்

இந்த வருடம் வெள்ளி விழா மற்றும் ரூபி விழா கொண்டாடும் ஆசிரியர்கள்

1. Rev. Sr. Leema Rose FCC (25 Years) -Thettivilai
2. Rev. Sr. Lisa Plathara SH (25 Years) - Pathukany
3. Rev. Sr. Elseena ASMI (25 Years) - Nithiravilai
4. Miss. Sudha (27 Years) - Malaicode
5. Mr. Jose (25 Years) - Malaicode
6. Mr. Selva Kumar (25 Years) - Malaicode
7. Mr. Rajesh (25 Years) - Malaicode
8. Mr. Berjin (25 Years) - Malaicode
9. Mrs. Rose Mary (40 Years) - Marappady
10. Mr . Vijaya Kumar (25 Years) - Manjalumoodu
11. Mrs. Thanka Rose(40Years) - Killiyoor
12. Mrs. Vimala Sekhar (27 Years) - Thettivilai
13. Mrs. Rani Alphonsa (27 Years) - Padanthalumoodu

***அருட்தந்தை ஜேக்கப் ஐயம்மாத்ற***
***இணை இயக்குநர்***

***அருட்தந்தை அபிலாஷ் சேவியர்***
***இயக்குநர்***

## சீரோ மலபார் இளையோர் இயக்கம் SMYM

### நடுவண் செயற்குழு தேர்தல்

தக்கலை மறைமாவட்ட சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் 2023 ம் ஆண்டு நடுவண் செயற்குழு தேர்தல் ஜூலை 16, ஞாயிற்றுக்கிழமை மதியம் 2.00 மணியளவில் கல்லுவிளை SMYM அலுவலகத்தில் நடைபெற்றது. தூய ஆவி பாடலுடன் நிகழ்வுகள் ஆரம்பமானது. மறைமாவட்ட SMYM துணைசெயலர் மெர்னிஷா வரவேற்று பேசினார். மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமைத்துவம் பற்றிய வகுப்புகள் வழங்கினார். மறைமாவட்ட SMYM இணைத்தலைவர் ஜாஸ்மின் அனுபவத்தை பகிர்ந்து கொண்டார். தொடர்ந்து தேர்தல் நடைபெற்றது. இதில் பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

| Sl.No | பொறுப்பு | பெயர் | அலகு |
|---|---|---|---|
| 1 | தலைவர் | மனோஜ் | முஞ்சிறை |
| 2 | இணைத்தலைவர் | அஞ்சனா | வயலின்கரை |
| 3 | துணைத்தலைவர் | ஜெசிலா மேரி | தக்காளிவிளை |
| 4 | செயலர் | அகில் | காரோடு |
| 5 | துணைச்செயலர் | அபிஷா | களியல் |
| 6 | பொருளர் | அஜித் | கிள்ளியூர் |

மறைமாவட்ட SMYM துணைத்தலைவர் அஞ்சனா நன்றியுரை வழங்கினார். இதில் 23 பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். இயக்க கீதத்துடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றது.



### புனித அல்போன்சா நடைபயணம்

தக்கலை மறைமாவட்ட SMYM இயக்கம் சார்பாக நாகர்கோவில், புனித அல்போன்சா திருத்தலம் நோக்கி நடைப்பயணம் நடைபெற்றது. 2023 ஜூலை மாதம் 22 தேதி காலை 6:30 மணி அளவில் தக்கலை, ஆயர் இல்லத்திலிருந்து நடைபயணம் ஆரம்பமானது. தக்கலை ஆயர் இல்லத்தில் காலையில் அனைவருக்கும் தேநீர் மற்றும் காலை உணவு வழங்கப்பட்டது. தக்கலை மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துபறம்பில் அவர்கள் ஜெபம் செய்து ஆசியுரை வழங்கி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். தொடர்ந்து நாகர்கோவில் புனித அல்போன்சா திருத்தலத்தில் அனைவருக்கும் வரவேற்பு வழங்கப்பட்டது. காலை 11 மணி அளவில் அருட்தந்தை சாஜன் நெட்டபொங்கு அவர்கள் நவநாள் நடத்தினார், அதைத் தொடர்ந்து இளைஞர் இயக்க இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் ஆடம்பர கூட்டுத் திருப்பலி நடைபெற்றது. மறைமாவட்ட துணைத்தலைவர் ஜெசிலா மேரி அனைவருக்கும் நன்றி கூறினார். அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஆலய பங்குதந்தை அருட்தந்தை. சணல் மற்றும் உதவி பங்குதந்தை அருட்தந்தை. ஜார்ஜ் அவர்கள் சிறப்பாக செய்திருந்தனர். இந்நிகழ்ச்சியில் தென்காசி மறைபரப்புதளம் மற்றும் தக்கலை மறைமாவட்டத்தை சேர்ந்த இளைஞர்களும் இறைமக்களும் திரளாக கலந்து கொண்டனர். அதைபோன்று சூசைபுரம் மறைவட்டத்தை சார்ந்த இளையோர்கள் மற்றும் இறைமக்களும் தங்கள் பங்குகளில் இருந்து விடியற்காலையில் நடைபயணமாக நாகர்கோவில் அல்போன்சா திருத்தலம் வந்தடைந்தனர்.



### நடுவண் செயற்குழு கூட்டம்

தக்கலை மறைமாவட்ட நடுவண் செயற்குழு கூட்டம் 2023 ஜூலை 23 ஞயிற்றுகிழமை தெற்றியோடு புனித பவுல் ஆலய வளாகத்தில் வைத்து மதியம்

12 மணியளவில் நடைபெற்றது. மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமை தாங்கினார். மணிப்பூரில் நிகழ்ந்து வரும் இனக்கலவரத்துக்கு எதிராக கண்டன பேரணி மற்றும் கருத்தமர்வு நடத்தலாம் என தீர்மானிக்கப்பட்டது. அதே போன்று மறைவட்ட அளவில் நிகழ்வுகள் நடத்த முயற்சி எடுக்க வேண்டும் என்றும் இயக்குநர் தந்தை கேட்டுக்கொண்டார். நிகழ்வுகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் புதிய நடுவண் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் படந்தாலுமூடு மறைவட்ட பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

**அலகு சந்திப்பு – தக்கலை பிலாங்காலை மறைவட்டம்**

தக்கலை பிலாங்காலை மறைவட்ட பொறுப்பாளர்கள் தங்கள் மறைவட்டத்தில் செயல்படும் அலகுகளை பார்வையிட்டு வருகின்றனர். அதன்படி 02.07.2023 அன்று பிலாங்காலை ஆலயத்திலும். 09.07.2023 அன்று கைசாலவிளை ஆலயத்திலும், 16.07.2023 அன்று காட்டாத்துறை ஆலயத்திலும் அலகு சந்திப்பு நிகழ்வு நடைபெற்றது.

***இவண்***
***அகில், செயலர்***

| BIRTHDAY OF REV. FATHERS AUGUST - 2023 | |
|---|---|
| Fr. Vinod Kanakalil | 04 |
| Fr. Shan Ayalloor | 08 |
| Fr. Rajesh Vayalumkal MCBS | 09 |
| Fr. Prince Cherippanattu | 10 |
| Fr. Robins Kuzhikodil | 14 |
| Fr. George Kandathil | 14 |
| Fr. Mathew Arekalam CMI | 19 |
| Fr. Vivek Kalarithara MCBS | 29 |




**மாதர் ஜோதிஸ் இயக்கம்**

சூசைபுரம் மறைவட்ட அளவிலான பெறுப்பாளர் கூட்டமானது, சூசைபுரம் புனித சூசையப்பர் ஆலயத்தில் ஜீலை 9 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணியளவில் தூய ஆவியார் பாடலுடன் ஆரம்பமானது. இயக்குநர் அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில் அவர்கள் தலைமை தாங்கினார். போட்டி மற்றும் வருகின்ற நிகழ்வுகள் குறித்து கலந்து ஆலோசிக்கப்பட்டது. திருமதி குளோரி அவர்கள் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவு பெற்றது. இக்கூட்டத்தில் 8 பேர் கலந்து கொண்டனர்.



படந்தாலுமூடு மறைவட்ட அளவிலான பெறுப்பாளர் கூட்டமானது, படந்தாலுமூடு திரு இருதய ஆலய வளாகத்தில் ஜுலை 20 ம் தேதி வியாழக்கிழமை மாலை 4.30 மணியளவில் நடைபெற்றது. மறைவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜஸ்டின் அவர்கள் தலைமை தாங்கினார். மறைவட்டத்தில் மாதர் ஜோதிஸ் இயக்கத்தை சிறப்பாக கொண்டு செல்வது குறித்து கலந்து ஆலோசிக்கப்பட்டது. பின்னர் மார்கம்களி போட்டி குறித்து விவாதிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் சுமார் 10 பேர் கலந்துகொண்டனர்.

மாதர் ஜோதிஸ் மறைமாவட்ட பொறுப்பாளர் கூட்டமானது கல்லுவிளை இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் ஜுலை 18 ம் தேதி பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றது. இயக்குநர் அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில் அவர்கள் தலைமை தாங்கினார். தாய்மார்களுக்கான போட்டிகள் குறித்து விவாதிக்கப்பட்டது. மார்கம்களிப்போட்டி மற்றும் பல்வேறு போட்டிகள் நடத்துவது குறித்து தீர்மானங்கள் எடுக்கப்பட்டது. பின் இறுதி ஜெபத்துடன்

கூட்டம் மாலை 4 மணியளவில் நிறைவுற்றது. இக்கூட்டத்தில் மாதர் ஜோதிஸ் பொறுப்பாளர்கள் 3 பேர் கலந்துகொண்டனர்.

தோமையார் திருநாளை கொண்டாடும் நோக்கத்துடன் தாய்மார்களுக்கான மார்கம்களிப் போட்டி ஜூலை 29 சனிக்கிழமை காலை 10 மணி அளவில் படந்தாலுமூடு திரு இருதய ஆலய வளாகத்தில் நடைபெற்றது. பேரருட்தந்தை தோமஸ் சத்யநேசன் குத்துவிளக்கு ஏற்றி போட்டியை தொடங்கி வைத்தார்கள். மொத்தம் 12 குழுக்கள் இப்போட்டியில் கலந்துகொண்டனர்.

போட்டியில் பரிசு பெற்றோர் விவரம்

| | |
|---|---|
| **முதல் பரிசு** | **திருக்குடும்ப ஆலயம், தக்காளிவிளை** |
| **இரண்டாம் பரிசு** | **புனித குழந்தை தெரசாள் ஆலயம், மஞ்சாலுமூடு** |
| **மூன்றாம் பரிசு** | **புனித தோமையார் ஆலயம், முழுக்கோடு** |

பரிசு பெற்ற தாய்மார்களுக்கு மாதர் ஜோதிஸ் இயக்கம் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கின்றோம்.

**திருமண ஆயத்தப் பயிற்சி**

திருமண ஆயத்தப் பயிற்சி வகுப்பானது ஜூலை 7 மற்றும் 8 தேதிகளில் கல்லுவிளை இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. இதில் 11 இளையோர்கள் கலந்து கொண்டனர். அடுத்த திருமண ஆயத்தப் பயிற்சி வகுப்பானது வருகின்ற ஆகஸ்ட் மாதம் 11 மற்றும் 12 தேதிகளில் கல்லுவிளை இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் நடைபெற உள்ளது.



***அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்***
***இயக்குநர்***




# வின்சென்ட்- தே-பவுல் சபை

## சுய தொழில் கடன் உதவி திட்டத்தொகை வழங்குதல்

*1.07.2023* அன்று தக்காளிவிளை, திருக்குடும்ப ஆண்கள் கிளை சபை மற்றும் தக்காளிவிளை, புனித அல்போன்சா பெண்கள் கிளைசபை சார்பாக சுய தொழில் கடன் உதவி திட்டத்தொகை வழங்கப்பட்டது. ஆண்கள் கிளை சபை சார்பாக 7 பயனாளிகளுக்கும், பெண்கள் கிளை சபை சார்பாக 7 பயனாளிகளுக்கும் சுய தொழில் கடன் உதவி திட்டத்தின் மூலமாக ஒவ்வொரு நபருக்கும் ₹*10,000* விகிதம் மொத்தம் ₹*1,40,000* வழங்கப்பட்டது. துணை பங்குத்தந்தை ஜோஸ் புரையிடத்துக்குன்னேல் அவர்கள் தலைமை தாங்கி சுய தொழில் கடன் உதவி திட்டத்தொகை உதவியினை வழங்கினார்கள். இந்த நிகழ்விற்கு மத்திய சபை திட்ட அலுவலர் சகோ. எட்வின்சன் அவர்கள் வருகை தந்து கடன் உதவி திட்ட கோப்புகளை பார்வையிட்டு கையொப்பமிட்டார்கள். மத்திய சபை செயலாளர் சகோ. சோனிக் ரீகன் மற்றும் சூசைபுரம் வட்டார சபை தலைவர் சகோ. பிரபு கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இந்த நிகழ்வினை ஆண்கள் மற்றும் பெண்கள் கிளைசபை பொறுப்பாளர்கள் ஒருங்கிணைந்து ஏற்பாடு செய்தார்கள்.



## திட்டம் வழங்கும் விழா

பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் செயல்படும் புனித வின்சென்ட் தே பவுல் கிளை சபைகளின் சார்பில் சுழற்சி திட்டமானது *29.07.2023* சனிக்கிழமை மாலை 5:30 மணி அளவில் ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை அஜின் ஜோஸ்



அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் அனைவரையும் வரவேற்று திட்டம் குறித்து மத்திய சபையின் துணைத் தலைவர் சகோதரர் ஐயாத்துரை அவர்கள் விளக்கி கூறினார். சிறப்பு விருந்தினராக மத்திய சபையின் செயலர் சகோதரர் சோனி ரீகன் கலந்துகொண்டு திட்டத்தின் நோக்கம் மற்றும் பயன்பாடு குறித்து விளக்கி கூறினார். தலைமை தாங்கிய அருள்தந்தை அவர்கள் தலைமை உரையாற்றி திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். மூன்று கிளை சபைகளும் இணைந்து சுமார் 30 நபர்களுக்கு தலா நான்காயிரம் வீதம் மொத்தம் ரூபாய் 130000 திட்டத்தொகை வழங்கப்பட்டது. நிறைவில் மகளிர் கிளைச் சபை பொருளர் திருமதி மரிய லியோனி நன்றி கூறினார். நிகழ்வினை மத்திய சபையின் திட்ட அலுவலர் சகோதரர் எட்வின்சன் தொகுத்து வழங்கினார்.

***சகோ. D.Pஷாஜி,***
***தகவல் தொடர்பு அலுவலர்***

# வரவிருக்கும் நிகழ்வுகள்

புனித ஜான் மரிய வியான்னி தின கொண்டாட்டம்,
இளங்குருமடம் – ஆகஸ்ட் 04
திருத்தொண்டு கூட்டம், தென்காசி – ஆகஸ்ட் 09
அருட்தந்தையர்களுக்கான புதிய திருப்பலி பயிற்சி – ஆகஸ்ட் 10
புதிய திருப்பலி நூல் வெளியீடு – ஆகஸ்ட் 15
வின்சென்ட் தே பவுல் ஆண்டுவிழா, முக்கூட்டுகல் – ஆகஸ்ட் 20
சீரோ மலபார் ஆயர் மாமன்றம், காக்கநாடு – ஆகஸ்ட் 21 – 26
மறைமாவட்ட மாமன்ற செயல்பாட்டு வரைமுறை (Instrumentum Laboris) வெளியீடு – ஆகஸ்ட் 28

# கன்னியாகுமரி
## சமூக சேவை சங்கம்

### மருத்துவ முகாம்

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம், ஆற்றூர் மரியா சித்த மருத்துவகல்லூரி இணைந்து நடத்திய இயற்கை மருத்துவ முகாம் மாறப்பாடி, புனித தோமையார் ஆலய வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு KKSSS துணை இயக்குநர் அருட்தந்தை அஜின் C தலைமை தாங்கினார். மரியா சித்த மருத்துவ கல்லூரி பேராசிரியர் மருத்துவர் பால சிவாசங்கர் “சித்த மருத்துவம் இன்றைய கால கட்டம்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். தொடர்ந்து சித்த மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என 79 பேர் கலந்து கொண்டனர் அவர்களுக்கு இலவச பரிசோதனை செய்து இலவச மருந்தும் அளிக்கப்பட்டது. இதில் 1 மருத்துவர் உட்பட 20 பயிற்சி மருத்துவர்களும் கலந்து கொண்டனர். நிகழ்வை மாறாப்பாடி களப்பணியாளர் திருமதி ராஜம் அவர்களுடன் இணைந்து மகளிர் சுய உதவிக்குழு நிகழ்வை ஒருங்கினைத்தார்கள்.

### கல்வி உதவித்தொகை

ஏழை மாணவர்களை ஆங்கில புலமையுடன் கூடிய திறமையானவர்களாக மாற்றுவதற்காக கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் கீழ் Educare அலகு



செயல்படுகிறது. இந்த அலகின் 3 நிலை மாணவர்கள் Educare பயிற்சியை நிறைவு செய்துள்ளனர். மாணவர்களின் இந்த அலகின் சார்பில் ஏழை மற்றும் ஆதரவற்ற மாணவர்களின் உயர் கல்விக்கு, ஆண்டுதோறும் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. தற்போது கழுவன் திட்டை பகுதியை சார்ந்த Educare முதல் அலகு (Batch) மாணவர் அபிஜித் என்பவருக்கு கல்வி உதவித்தொகையை KKSSS-ன் இயக்குநர் அருட்தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் வழங்கினார்கள்

**பெற்றோர்கள் சந்திப்பு**

Educare பயிற்சியின் 4ம் நிலை மாணவர்களின் பெற்றோர்கள் சந்திப்பு ஜீலை 29 தேதி KKSSS அரங்கத்தில் வைத்து நடைபெற்றது. KKSSS இயக்குநர் அருட்தந்தை தோமஸ் செபஸ்டியன் அவர்கள் Educare மாணவர்களின் ஆறு மாத செயல்பாடுகளையும் அதன் பிறகு மாணவர்களின் வீடுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை பெற்றோர்களிடம் கேட்டறிந்தார். ஒருங்கிணைப்பாளர் Sr.மெரின் றோஸ் அவர்கள் Educare திட்டத்தின் வருங்கால செயல்பாடுகள் மற்றும் நிபந்தனைகள் பற்றி கூறினார்கள். தொடர்ந்து Educare வகுப்பும் நடைபெற்றது. இதில் 16 பெற்றோர்களும் 18 மாணவர்களும் பங்கேற்றனர்.

**பணியேர்ப்பு விழா**



கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் துணை இயக்குநராக செயல்பட்ட அருட்தந்தை மகேஷ் அவர்கள் தற்போது புலரி சமூக சேவை சங்கத்தின் இயக்குநராக பணியேற்றுக்கொண்டார். தொடர்ந்து ஜூன் மாதம் முதல் கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் புதிய துணை இயக்குநராக அருட்தந்தை அஜின் C அவர்கள் பணியேற்றுக்கொண்டார். அருட்தந்தை அவர்களை KKSSS இயக்குநர் அவர்கள் பொன்னாடை அணிவித்து வரவேற்று பணியாளர்களுக்கு அறிமுகப்படுத்தினார்.

***அருட்தந்தை எபின் பூவத்துமூட்டில்***
***செயலர்***

# தக்கலை மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழு

**மூத்தோர் தின கொண்டாட்டம்**

தாத்தா பாட்டி தின கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக 2023 ஜூலை 15 சனிக்கிழமை அன்று மறைமாவட்டத்தை சார்ந்த மூன்று முதியவர்களுக்கு மருத்துவ உதவிக்கான நிதியுதவி வழங்கப்பட்டது.

2023 ஜூலை 20 வியாழக்கிழமை மார்த்தாண்டம், கருங்கல், வெட்டுமணி ஆகிய இடங்களில் பலவீனமான, கைவிடப்பட்ட 45 முதியவர்களுக்கு உணவுகள் வழங்கப்பட்டது.

2023 ஜூலை 23 அன்று மதியம் 12 மணியளவில் நடைக்காவு ஷாலோம் ஹோம் முதியோர் இல்லம் பார்வையிடப்பட்டது. அங்கு வாழும் ஆதரவற்ற 31 முதியோர் மற்றும் நோய்வாய்ப்பட்ட நோயாளிகளைப் பார்வையிட்டு அவர்களுக்காக சிறப்பு செபங்கள் ஏறெடுக்கப்பட்டது. அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.



*அருட்சகோதரி. டயானா SDS*
*செயலர்*

| FEASTDAYS OF REV. FATHERS - AUGUST 2023 | |
|---|---|
| Fr. Anil Raj Dominic | 08 |
| Fr.Rocky Kulangara | 16 |
| Fr. Augustine Thalodil | 28 |
| Fr. Tobin Alapurackal | 28 |

# அருட்சகோதரர்களிடமிருந்து

**ஈசோ மெசியாவில் அன்பார்ந்தவர்களே..!**

ஜூலை மாதம் 3 ஆம் தேதி புனித தோமையார் (துக்ரானா) திருநாள் அனைத்து உயர் குருத்துவ கல்லூரிகளிலும் கொண்டாடப்பட்டது. திருச்சூர், மேரி மாதா உயர் குருத்துவ கல்லூரியில் ஜூலை 10 ஆம் தேதி அங்கு பணியாற்றிய முன்னாள் பேராசிரியர்களின் கூட்டம் நடைபெற்றது. மேலும் இளங்குருத்துவக் கல்லூரி அதிபர் தந்தை அவர்கள் மேரி மாதா உயர் குருத்துவ கல்லூரியில் பயிலும் அருட்சகோதரர்களை ஜூலை மாதம் 24 ஆம் தேதி சந்தித்தார். மேலும் ஜூலை மாதம் புனித அல்போன்சம்மாவின் பெயர் கொண்ட விழா ஜூலை 28 ஆம் தேதி கொண்டாடப்பட்டது. கோட்டயம் புனித தோமையார் உயர் குருத்துவ கல்லூரியில் உள்ள அருட்சகோதரர்கள் பரணிங்கானம் புனித அல்போன்சம்மாவின் திருத்தலத்திற்கு புனித பயணம் மேற்கொண்டனர்.

அருட்சகோதரர்கள் அனைவரும் நலமாக உள்ளனர். இதுவரை எங்களுக்காக ஜெபித்த உங்கள் அனைவருக்கும் நன்றி. தொடர்ந்தும் எங்களுக்காக இறைவனிடம் ஜெபியுங்கள். நன்றி

அனைத்து அருட்தந்தையர்களுக்கும் புனித ஜான் மரிய வியானி திருவிழா நல்வாழ்த்துக்கள்.

***சகோ. சுனில் ஆன்றணி***

---

# *புனித மரியன்னை இளங்குருமடம் முக்கூட்டுகல்*

**இளங்குருமட புதிய ஆன்மீக தந்தையாக சங்ஙனாச்சேரி மறைமாவட்டத்தைச் சார்ந்த அருட்தந்தை சாக்கோ புதியபறம்பில் அவர்கள் ஜூலை 24 அன்று வருகை தந்தார்.**

**24.7.2023 திங்கட்கிழமை அன்று முக்கூட்டுக்கல், புனித மரியன்னை இளம்குருமடம் அருட்சகோதரர்கள் இணைந்து ஆரல்வாய்மொழி புனித தேவசகாயம் பிள்ளை ஆலயத்திற்கு புனித பயணம் சென்றனர்.**

# புலரி சமூக சேவை சங்கம்
## தென்காசி மறைபரப்புதளம்

**கடன் வழங்கும் திட்டம்**

புலரி சமூக சேவை சங்கம் சார்பில் மகளிர் குழுக்களுக்கு சிறுகடன் உதவி வழங்கும் திட்டம் 13.07.2023 அன்று தொடங்கப்பட்டது. அதன்படி பார்டர் பகுதியில் செயல்படும் பாரதி மகளிர் குழுவிற்கு ரூபாய் 1,40,000 மற்றும் குற்றாலம் சாரல் ஆண்கள் சுய உதவி குழுவிற்கு ருபாய் 50,000 கடனாக வழங்கப்பட்டது.

**கல்வி குறித்த விழிப்புணர்வு கருத்தமர்வு**

புலரி சமூக சேவை மையத்தில் கல்வியின் முக்கியத்துவத்தை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் உணரும் பொருட்டு கருத்தமர்வு 15.07.2023 அன்று நடைப்பெற்றது. இதில் கல்வி கடந்து வந்த பாதை, நிகழ் கால கல்வியின் நிலை, பெற்றோர் மாணவர் கடமைகள் போன்றவற்றை மையப்படுத்தி புலரி சமூக சேவை மைய இயக்குநர் அருட்பணி. மகேஷ் அவர்கள் வகுப்பு நடத்தினார். புலரி தன்னார்வலர் செல்வன் பிரதின் வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கியதோடு நிகழ்வை ஒருங்கிணைத்தார்.



**உலக முதியோர் தின கொண்டாட்டம்**

புலரி சமூக சேவை சங்கத்தில் 23.07.2023 அன்று உலக முதியோர் தினம் கொண்டாடப்பட்டது. விழாவில் செல்வி. ராஜி மற்றும் செல்வன். பிரதின் ஆகியோர் இணைந்து செப வழிபாடு நடத்தினர். புலரி சமூக சேவை சங்க இயக்குநர் அருட்பணி. மகேஷ் அவர்கள் தலைமையுரையாற்றி முதியோர்களை வாழ்த்தியதோடு அனைவரையும் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். புலரி தன்னார்வ மாணவ மாணவியர் கலை நிகழ்சிகள் நடத்தியதோடு முதியோரை

மகிழ்விக்கும் பொருட்டு அவர்களுக்கென்று சிறப்பு விளையாட்டுக்களையும் நடத்தினர். இறுதியில் அனைவருக்கும் இரவுணவு வழங்கப்பட்டது. பிரானூர், பார்டர், கொட்டாக்குளம் போன்ற கிராமங்களிலிருந்து சுமார் 60 தாத்தா பாட்டிக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். புலரியின் அலுவலகப் பணியாளர்கள் அருட்சகோதரி அல்போன்சா FCC, திருமதி. அனு கிறிஸ்டி களப்பணியாளர்கள் திருமதி. மரிய செல்வம், திருமதி. தேவிகலா மற்றும் தன்னார்வலர் செல்வி. பிரதீனா செல்வன். மைக்கிள் ஆகியோர் விழாவை முன்னின்று நடத்தினர்.

**புனித அல்போன்சா திருநாள் கொண்டாட்டம்**

புலரி சமூக சேவை சங்கத்தில் புனித அல்போன்சா திருநாள் 28.07.2023 அன்று வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. விழாவின் முக்கிய நிகழ்வாக தனது பெயர் திருவிழா கொண்டாடும் புலரி அலுவலக ஒருங்கிணைப்பாளர் அருட்சகோதரி அல்போன்சா அவர்கள் கௌரவிக்கப்பட்டார். அருட்பணி. மகேஷ் அவர்கள் தலைமை தாங்கினார். திருமதி. கனி அவர்கள் அருட்சகோதரி அவர்களை வாழ்த்தி பேசினார். நிகழ்வில் வாழ்த்துப்பாடல் பாடப்பட்டு கேக் வெட்டி பகிரப்பட்டது. இறுதியில் அனைவருக்கும் மதிய உணவும் வழங்கப்பட்டது. புலரி தையல் பயிற்சியாளர்கள் நிகழ்வை முன்னின்று நடத்தினர். ஆசிரியர் திருமதி வனிதா அவர்கள் நிகழ்வை ஒருங்கிணைத்தார்.



**தலைமைத்துவப் பயிற்சி**

புலரி மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி வகுப்பு 29.07.2023 அன்று நடைபெற்றது. பெண் சமூகத்தின் பின்னிட்ட சுவடுகள், சமகால பெண்களின் நிலை, சமூக எதார்த்தங்கள், தற்சார்பு நிலை போன்ற கருத்துக்களை மையப்படுத்தி அருட்பணி. மகேஷ் அவர்கள் வகுப்பு நடத்தினார். இறுதியில் கேள்வி பதில் விவாதமும் நடைபெற்றது. பல்வேறு பகுதிகளிலிருந்து சுமார் 30 மகளிர் பங்கேற்று பயன் பெற்றனர்.

***அருட் சகோதரி அல்போன்சா***
***அலுவலகப் பணியாளர்***

# தக்கலை மறைமாவட்ட அருட்பணிப்பேரவை

தக்கலை மறைமாவட்ட VI ஆம் அருட்பணிப்பேரவையின் 5-ஆம் அமர்வானது தக்கலை மறைமாவட்ட மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில், குருகுல முதல்வர் பேரருட்தந்தை அருட்தந்தை தோமஸ் பவத்துப்பறம்பில் மற்றும் அருட்பணிப்பேரவையின் இயக்குனர் பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் அவர்கள் முன்னிலையில் 20.05.2023 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தக்கலை சங்கமம் மார் மாத்யூ காவுகாட் அரங்கில் நடைபெற்றது. பேரவையின் மூத்த உறுப்பினர் திரு. மரியதாஸ் ஆசிரியர் அவர்கள் அனைவரையும் சிறப்புற வரவேற்றார்கள். பேரவையின் இணை செயலர் திரு. சோனிக்ரீகன் அவர்களால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மேதகு ஆயர் அவர்கள் தன்னுடைய துவக்க உரையில் பேரவை உறுப்பினர்கள் பங்களவில் நின்றுவிடாமல் மறைமாவட்ட அளவிலும் தங்களது பங்களிப்பை முழுமையாக தர வேண்டும் எனவும், நமது மறைமாவட்டம் உதயமாகி 27 வருடங்கள் ஆகியுள்ள நிலையில் முதல் முறையாக "மறைமாவட்ட மாமன்றம்" செப்டம்பர் 28,29,30 ஆகிய தேதிகளில் நடைபெற இருப்பதன் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டியதோடு விரிவாக்கம் செய்யப்பட்ட மறைபரப்பு தளங்களில் நம் பணிகள் எவ்வாறு நடைபெறுகிறது என்ற பார்வை நம் ஒவ்வொருவருக்கும் வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

முதல் கருத்துரை பகுதியில் தக்கலை மறைமாவட்ட முதன்மை செயலர் பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் அவர்கள் "உயர் பேராய மாமன்றம்" குறித்தும் சீரோமலபார் திருச்சபை எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அதற்கான தீர்வுகள் குறித்தும் விளக்கிக் கூறினார். இரண்டாம் கருத்துரைப் பகுதியில் அருட்பணிப்பேரவையின் செயலர் குமரித்தோழன் திரு. ஜாண் ஆசிரியர் அவர்கள் "மறைபரப்புப் பணிகளில் பொதுநிலையினரின் பங்கு" மற்றும் திருச்சபையின் இன்றைய சூழலும் அதற்கேற்ற நமது செயல்பாடுகளும் என்ற தலைப்பில் உரையாற்றினார்.

தொடர்ந்து நடைபெற்ற குழு விவாதத்தில்

1. இன்றைய சமூக பொருளாதார அரசியல் சூழலில் இயேசுவின் நற்செய்தியை என்னென்ன வழிகளில் பொதுநிலையினரால் மக்களுக்கு எடுத்துச்செல்ல இயலும்?
2. சீரோ-மலபார் திருச்சபையின் சமூகத்தை மேலும் ஆற்றல் மிக்கதாக மாற்றுவதில் பொதுநிலையினரின் பங்கு என்ன?
3. தக்கலை மறைமாவட்டம் விரிவாக்க அனுமதி பெற்றுள்ள பகுதிகளில் பொதுநிலையினராகிய நாம் நற்செய்தி பணியினை எடுத்துச்செல்ல எவ்வகைகளில் ஈடுபடலாம்?

4. நம்பிக்கை பயிற்சியில் எந்த அளவுக்கு முக்கியத்துவம் குடும்பங்கள், பிள்ளைகள், பெற்றோர்கள், மறைக்கல்வி நிலையங்கள், குருக்கள், அருட்சகோதரிகள் என்போரின் வாயிலாக கிடைக்கப் பெறுகின்றது? என்ற தலைப்புகளில் விவாதங்கள் நடைபெற்றது.

செப்டம்பர் மாதம் நடைபெற இருக்கும் "மறைமாவட்ட மாமன்றத்தில்" அருட்பணிப் பேரவை சார்பாக கலந்து கொள்பவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். அவர்களின் பெயர்கள் : திரு. ஜாண், திரு. சோனிக்ரீகன், திருமதி. சசிகலா விஜயகுமாரி, திருமதி ஜாக்குலின், திரு. தினேஷ், திரு. பிபின், திரு. சுனில், திருமதி. ராணி, திருமதி. ஜலஜாமேரி ஆகியோராவர்.

மேதகு ஆயர் அவர்கள் தன்னுடைய நிறைவுரையில் நாம் சீரோ-மலபார் திருச்சபையை சார்ந்தவர்கள் என்ற சமூக உணர்வுடன் வாழ்வது அவசியம் என கேட்டுக்கொண்டார். பேரவையின் இயக்குனர் பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் அவர்கள் பேரவை உறுப்பினர்களுக்கான அறிவுப்புகளை தெரிவித்தார். திருமதி. ஜாக்குலின் பேராசிரியை அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். மேதகு ஆயர் அவர்களின் நிறைவு ஆசியுடன் கூடுகை இனிதே நிறைவடைந்தது.

## தமிழக – பாண்டிச்சேரி ஆயர் பேரவை ஆண்டுக்கூட்டம் ஜூலை 2023

தமிழக – பாண்டிச்சேரி அருட்பணிப் பேரவையின் ஆண்டுக் கூடுகை 09.07.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று கோயம்பத்தூர் ஆயர் இல்ல வளாகத்தில் வைத்து நடைபெற்றது. தக்கலை மறைமாவட்டத்தின் சார்பாக அருட்பணிப் பேரவையின் இயக்குனர் பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன், செயலர் திரு. ஜாண், இணை செயலர் திரு. சோனிக்ரீகன் மற்றும் பேரவை உறுப்பினர் திருமதி. லதா ஆகியோர் கலந்து கொண்டனர். தமிழக ஆயர் பேரவையின் தலைவர் பேராயர் Dr. ஜார்ஜ் அந்தோணிசாமி அவர்கள் தலைமையில் காலை 9 மணிக்கு இறைவணக்கத்துடன் கூட்டம் துவங்கியது. தமிழகம் மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களைச் சார்ந்த மறைமாவட்டங்களுக்குட்பட்ட ஆயர்கள், இயக்குனர் அருட்தந்தையர்கள், செயலர்கள் இக்கூடுகையில் கலந்து கொண்டனர். பேரவையின் துணைத்தலைவர் திரு. வில்லியம் குமார் அவர்கள் அனைவரையும் இன்முகத்தோடு வரவேற்றார். பேரவையின் செயலர் அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப் அவர்கள் கடந்த 2022 – 2023 -ம் ஆண்டிற்கான அருட்பணிப் பேரவையின் அறிக்கையை சமர்ப்பித்தார். அறிக்கையில் தக்கலை மறைமாவட்ட அருட்பணிப்பேரவையின் "அமைப்பு சாரா தொழிலாளர் நலன்" குறித்த கருத்தமர்வின் பதிவும் இடம்பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

**தொடக்க உரை:**

தமிழக ஆயர் பேரவையின் தலைவர் பேராயர் Dr. ஜார்ஜ் அந்தோணி சாமி அவர்கள் தன்னுடைய துவக்க உரையில்

1. இன்றைய காலகட்டத்திற்கு ஏற்றதாக நமது அனைத்து செயல்பாடுகளும் அமைய வேண்டும்.
2. கிறிஸ்து நமக்கு காண்பித்த அன்பின் வழிமுறையை நாம் பின்பற்ற வேண்டும்.
3. உண்மையான அமைதி என்பது கிறிஸ்துவுக்கு நம்மை சமர்ப்பிப்பதில் தான் அடங்கியுள்ளது.
4. சமூக சமத்துவ கட்டமைப்பிற்கு ஊறுவிளைவிக்கும் பொதுசிவில் கொள்கை, புதிய கல்வி கொள்கை போன்றவற்றிற்கு எதிராக நாம் குரல் கொடுப்பது அவசியம்.
5. மணிப்பூர் மாநிலத்தில் சிறுபான்மையினர் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைக்கு எதிராக குரல் கொடுப்பதும் உறைவிடம் இழந்து வாடும் சுமார் 50000 மக்களுக்காக உதவிக்கரம் நீட்டவும் நாம் கடமைப்பட்டுள்ளோம்.
6. மணிப்பூர் கலவரத்தில் 300 க்கும் மேற்பட்ட கிறிஸ்தவ ஆலயங்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளது. சிறுபான்மையினருக்கு எதிராக தொடுக்கப்பட்ட பெரும் வன்முறை.
7. இக்கால கட்டத்தில் சமூக விழிப்புணர்வு மற்றும் சமூக அநீதிகளுக்கு எதிராக “மதசார்பற்ற அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகளோடு” இணைந்து போராடுவதும் அவசியம், என்ற கருத்துகளை சுட்டிக்காட்டி துவக்க உரையாற்றினார்.

**கருத்துரை**

சென்னை உயர்நீதி மன்றத்தின் வழங்குரைஞரும் தேசிய சமூக சேவைகள் அமைப்பின் ஆலோசகருமான அருட்தந்தை கிறிஸ்து ராஜாமணி MA, ML, phd அவர்கள் “இன்றைய ஜனநாயகம் எதிர்கொள்ளும் சவால்களும் நமது பதிலிறுப்பும்” என்ற தலைப்பில் கருத்துரை வழங்கினார்கள். அவர் தமது சிறப்புமிகு கருத்துரை அமர்வில்

1. சிறுபான்மையினருக்கு எதிராகவும் அரசியல் அமைப்பு சட்டத்திற்கு எதிராகவும் கலகங்களும் வன்முறைகளும் எழும்போது நாம் அமைதியாக இருந்தால், நாம் தீமையின் பக்கம் நிற்கிறோம் என்பதே உண்மை.
2. இன்றைய பொதுசிவில் சட்டம், மதமாற்ற தடைச்சட்டம், புதிய கல்வி கொள்கை போன்றவை இஸ்லாமிய, கிறிஸ்தவ மற்றும் சிறுபான்மையினருக்கு எதிராக திணிக்கப்படும் ஒன்றாக அமைகிறது.
3. கடந்த 8 வருடங்களாக நடைபெற்ற ஒன்றிய அரசின் ஆட்சிகாலத்தில் தலித் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான வன்முறைகள் 83% விழுக்காடு அதிகரித்திருப்பது அதிர்ச்சி தருகிறது.
4. பெண்களுக்கு எதிரான, குழந்தைகளுக்கு எதிரான, தொழிலாளர்களுக்கு எதிரான, சுற்றுச்சூழல் மற்றும் இயற்கைக்கு எதிரான வன்முறைகளும் அதிகரித்துள்ளது.

5. 1925 -ம் ஆண்டு முதலே RSS இந்தியாவை ஒரு "இந்து ராஷ்ட்ராவாக" மாற்ற வேண்டும், எவ்வழியிலாவது ஆட்சியை பிடிக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயல்படுகிறது.
6. நமது வலிமை என்பது "இந்திய அரசியல் அமைப்பு" சட்டத்தில் அடங்கியுள்ளது. சமய சார்பற்ற இயக்கங்கள், கட்சிகள் இவற்றோடு கரம்கோர்த்து சமூகநீதிக்காக நாம் குரல் கொடுப்பது காலத்தின் கட்டாயம்.
7. எனவே, நம் சகோதரர்களுக்கு இன்றையச் சூழலை எடுத்துரைத்து, கல்வி மற்றும் அரசு பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, இயற்கையோடு இணைந்து வாழ வேண்டும் என தனது கருத்துரையில் தெரிவித்தார்.

**குழுவிவாதம்**:

பேரவையின் அனைத்து அங்கத்தினர்களும் 10 குழுக்களாக பிரிக்கப்பட்டு விவாதத்திற்கான தரவுகள் வழங்கப்பட்டன.

1. இந்திய நாட்டின் ஒருங்கிணைந்த சமூகத்தின் சிறப்பம்சம் என்பது சமய சார்பின்மை, சகோதரத்துவம், பன்முகத்தன்மை இவற்றில் அடங்கியுள்ளது.
   * இதற்கு எதிராக எழும் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு சமத்துவத்தை நிலைநாட்ட கிறிஸ்தவர்களாக நாம் என்ன செய்யலாம்?
   * சிறுபான்மையினர் இணைந்து வன்முறை தாக்குதல்களை எதிர்கொள்வது எவ்வாறு?
   * இந்திய குடிமக்களாக வன்முறையை எவ்வாறு அணுகலாம்?
2. இந்திய அரசியல் அமைப்பு சட்டம் தான் நமக்கு பாதுகாவல் அதனை பாதுகாக்க நாம் என்ன செய்ய வேண்டும்?
   * இப்பணியில் யாரை நாம் கூட்டணி சக்திகளாக கருதுகிறோம்?
   * நாம் கடைபிடிக்க வேண்டிய யுக்திகள் என்னென்ன?

**தீர்மானங்கள்**

குழு விவாதத்திற்கு பின்பு தமிழக – பாண்டிச்சேரி ஆயர் பேரவையால் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, ஒவ்வொரு மறைமாவட்டமும் செயலாக்கம் புரிய பரிந்துரைக்கப்பட்டது.

i. அரசியல் அமைப்பு சட்டம் குறித்து பங்குகளில் மற்றும் மறைமாவட்டங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

ii. நம் அடிப்படை உரிமைகள், கடமைகள் பற்றிய தெளிவுகள் பங்கு அளவில், பக்த இயக்கங்களில், ஏனைய இயக்கங்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு தரப்பட வேண்டும்.

iii. கிறிஸ்தவர் ஒன்றிப்பு, சிறுபான்மையினர் கூட்டமைவு, அருட்பணிப் பேரவை, பல்சமய உரையாடல் போன்ற பணிக்குழுக்கள் அனைத்து மறைமாவட்டங்களிலும் உருவாக்கப்படுதலும், செயல்பாட்டை வலுப்படுத்துதலும் வேண்டும்.

iv. உறவியங்கள், பங்குகள் மற்றும் மறைமாவட்ட அளவில் சமய சார்பற்ற இயக்கங்களோடு இணைந்து செயல்படுவது.

v. சமூக ஊடகங்கள் வாயிலாக விழிப்புணர்வும் நம் அடிப்படை உரிமைகள் மற்றும் உணர்வுகளை மக்களுக்கு எடுத்துரைத்தல். (Our Media. Matha TV)

பேரவை கூடுகையில் கலந்து கொண்ட அனைவருக்கும் சகோதரி ரீட்டா மேரி அவர்கள் நன்றி கூறினார்கள். தமிழக – பாண்டிச்சேரி ஆயர் பேரவை தலைவர் பேராயர் Dr. ஜார்ஜ் அந்தோணிசாமி அவர்கள் அனைவருக்கும் நிறைவு ஆசீர் வழங்கிட பேரவைக் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

***இவண்***
***திரு. ஜாண், செயலர்***

## இதர செய்திகள்

- நாங்குநேரி நிர்மலா இல்ல கட்டுமான பணிகள் 2023 ஜூலை 03 அன்று தொடங்கப்பட்டுள்ளது.
- தெற்றிவிளை, புனித மிக்கேல் அதிதூதர் ஆலயத்திற்கான அடிக்கல் 2023 ஜூலை 03 அன்று ஆயர் அவர்களால் மந்திரிக்கப்பட்டது.
- கோதமங்கலம் CSN துறவற மகாணத்தலைவி அருட்சகோதரி லின்சி CSN அவர்கள் 2023 ஜூலை 12 அன்று நமது மறைமாவட்டத்தில் விரிவுபடுத்தபட்ட மறைபரப்பு பகுதிகளை பார்வையிட்டார்.
- சீனாய் இறையியல் கல்லூரியில் இந்தவருட கல்வியாண்டு 2023 ஜூலை 16 முதல் ஆரம்பமானது. 4 பேர் பயின்று வருகின்றனர்.
- சூசைபுரம் புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2023 ஜூலை 29 அன்று வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது.
- அருட்சகோதரி லீனா பரம்பகத்து SABS (குலசேகரம் கான்வென்ட்) அவர்களின் சகோதரர். திரு. சாபு ஜோசப் (52) அவர்கள் 2023 ஜூலை 31 அன்று நித்திய ஓய்வுக்கு அழைக்கப்பட்டார். அருட்சகோதரியின் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலையும் செபங்களையும் மறைமாவட்டம் சார்பாக தெரிவித்துக் கொள்கிறோம்.

# மறைமாவட்டச் செய்திகள்

## புனித தோமையார் ஆலய அர்ச்சிப்பு மற்றும் வைரவிழா – பளுகல்

புதிதாக கட்டப்பட்ட பளுகல் புனித தோமையார் ஆலய அர்ச்சிப்பு 2023 ஜூலை 01 காலை 09.30 மணியளவில் ஆரம்பமானது. பாறசாலை ஆயர் தாமஸ் மார் யூசிபியஸ் புதிய கொடிமரத்தை மந்திரித்தார். சங்ஙனாச்சேரி துணை ஆயர் மார் தாமஸ் தறையில், புதிய 'கல்குரிசு' மற்றும் தேவாலய மணியை மந்திரித்தார். தொடர்ந்து நடைபெற்ற ஆடம்பரத்திருப்பலியில் மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமை தாங்கினார். ஆயர் மார் தாமஸ் தறையில் அவர்கள் மறையுரை வழங்கினார்.

2023 ஜூலை 09 ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு, வைரவிழா கொண்டாட்டம் நடைபெற்றது மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை. தாமஸ் பவத்துப்பறம்பில் தலைமை வகித்தார். ஆவணக்காப்பாளர் ஜோஷி குளத்தும்கல் மறையுரை வழங்கினார். புதிய அருட்தந்தையர்கள் அஜின் C ஜோசப், ஜார்ஜ் கண்டத்தில், மற்றும் பிரின்ஸ் செரிப்பநாட்டு முன்னிலையில் திருப்பலி நடைபெற்றது. உயர் பேராய கூரியா ஆயர் மார் அந்தோணி சில்வானோஸ் அவர்களின் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஆலய வைரவிழா, முதல் திருவிருந்து, அருட்சகோதரி விஜில் மரியா SH அவர்களின் வெள்ளி விழா உள்ளிட்ட நிகழ்வுகள் நடைபெற்றது. இதற்காக அனைத்து ஏற்பாடுகளையும் ஆலய பங்குதந்தை அருட்தந்தை ஜேக்கப் ஐய்யம்மாத்ற அவர்கள் சிறப்பாக செய்திருந்தார்.

## ஆலய இடமாற்றம் – மதுரை

தீபகம், புனித சாவறா ஆலய இறைப்பணி CMI துறவற அருட்தந்தையர்களால் நிறுத்திவைக்கப்பட்டது. ஆகவே அப்பங்கு இறைமக்கள் அரியூர் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர். அரியூர் புனித அல்போன்சா சமூக கூடம் புதிய ஆலயமாக புதுப்பிக்கப்பட்டது. 2023 ஜூலை 02 அன்று காலை 9.30 மணியளவில் மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்களால் புதுப்பிக்கப்பட்ட மதுபகா மந்திரிக்கப்பட்டு திருப்பலி நிறைவேற்றப்பட்டது. புதிய பங்கு தந்தையாக அருட்தந்தை ஜோகேஷ் போளசிறா நியமிக்கப்பட்டார். மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தாமஸ் பவத்துப்பறம்பில் புதிய பங்குதந்தை நியமன ஆணையை வாசித்தார். தொடர்ந்து புனித தோமையார் தின கொண்டாட்டம் நடைபெற்றது.

**மணிப்பூர் சிறப்பு செபம்**

மணிப்பூர் மாநிலத்தில் அமைதி நிலவ வேண்டி 2023 ஜூலை 02 அன்று சிறப்பு செப வழிபாடுகள் நடைபெற்றது. எல்லா பங்குகளிலும் மெழுகுவர்த்தி ஏந்தி சிறப்பு செபமாலை மற்றும் செபங்கள் ஏறெடுக்கப்பட்டன.

**மவுண்ட் செயின்ட் தாமஸில் சபா தின கொண்டாட்டம்**

காக்கநாடு மவுண்ட் செயின்ட் தாமஸில் இந்த வருட சபா தின கொண்டாட்டம் ஜூலை 3 அன்று நடைபெற்றது. சீரோ மலபார் சபையின் எல்லா மறைமாவட்ட பிரதிநிதிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். நமது மறைமாவட்டத்திலிருந்து அருட்தந்தை செபி மணிமலகண்டத்தில், அருட்தகோதரி அன்சிட் றீசா SABS., அருட்தகோதரி வினீதா FCC அருட்தகோதரி அல்போன்ஸ் ஜோஸ் CMC., திரு. ஜினோ, திரு. ஞானதாஸ், திருமதி ஜலஜா மேரி மற்றும் திருமதி ஜூலியட் பேபி ஆகியோர் கலந்து கொண்டனர். ஆடம்பர இராசை திருப்பலிக்கு பின் உயர் பேராயர் கர்டினால் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி அவர்கள் தலைமையில் சபாதினம் கொண்டாடப்பட்டது.

**புதிய நிதிக்குழு அமைப்பு**

தக்கலை மறைமாவட்டத்தில் கடந்த 5 ஆண்டுகள் செயல்பட்டு வந்த நிதிக்குழு தற்போது மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அதன்படி 2023 ஜூலை 04 அன்று புதிய நிதிக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அருட்தந்தை ஜான்சிலால் அரக்கபறம்பில், பேரருட்தந்தை தாமஸ் பவத்துபறம்பில், அருட்தந்தை ஜோஷி குளத்தும்கல், அருட்தந்தை ஆண்டனி ஜோஸ், அருட்தந்தை டென்சி முண்டுநடக்கல், அருட்தந்தை. ஜியோ சுழிக்குந்நேல், அருட்தந்தை அஜீஷ் அட்டியில் மற்றும் திரு. அகஸ்டின் தரப்பேல் ஆகியோர் புதிய நிதிக்குழு உறுப்பினர்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

**தையல் பயிற்சி மையம் தொடக்கம் – கம்பம்**

தேனி திருத்தொண்டு தள பகுதியில் புதிதாக 2 தையற்பயிற்சி மையங்கள் தொடங்கப்பட்டுள்ளது. 2023 ஜூலை 06 அன்று மாலை 3.00 மணியளவில் லோயர் கேம்ப் பகுதியிலும், மாலை 5.30 மணியளவில் கக்கம் காலணி பகுதியிலும் காஞ்சிரப்பள்ளி குருகுல முதல்வர் பேரருட்தந்தை. ஜோசப் வெள்ளமற்றம் அவர்களால் தையற்பயிற்சி மையம் திறந்து வைக்கப்பட்டது. இதற்கான முயற்சிகளை அருட்தந்தை பென்னி தட்டாம்பறம்பில் அவர்கள் சிறப்பாக செய்திருந்தார்.

### விரிவாக்கப்பட்ட புதிய கட்டிடம் மந்திரிப்பு – மாங்கரை

மாங்கரை புனித வியாகப்பர் உயர்நிலை பள்ளி வளாகத்தில் புதிதாக கட்டப்பட்ட அலுவலக மந்திரிப்பு 2023 ஜூலை 10 திங்கள்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்றது. அனைத்து பள்ளிகளின் தாளாளர் அருட்தந்தை ஜெஸ்டின் சுதீஷ் திறந்து வைத்தார். குருகுல முதல்வர் பேரருட்தந்தை தாமஸ் பவத்துப்பறம்பில் அவர்கள் ஆசியுரை வழங்கினார். மாங்கரை ஆலய பங்குதந்தை அருட்தந்தை டோஜி முன்னிலை வகித்தார்.

### ராமேஸ்வரம் திருத்தொண்டு நிலைய முதல் திருப்பலி

ராமேஸ்வரம் திருத்தொண்டு நிலைய பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஓலைக்குடிசையில் 2023 ஜூலை 15 சனிக்கிழமை அன்று முதல் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தாமஸ் பவத்துப்பறம்பில் தலைமையில் அருட்தந்தை ஜோகேஷ் போளசிறா மற்றும் அருட்தந்தை மேத்யூ குழிஞாலில் ஆகியோர் திருப்பலி நிறைவேற்றினர். இதில் சுமார் 40 இறைமக்கள் கலந்து கொண்டனர்.

### ஆயுர்வேத மருத்துவ முகாம் – கயத்தார்

ஜூலை 15, 2023 அன்று, FCC அருட்சகோதரிகள் தலைமையில் கயத்தாறு ராஜாபுதுக்குடி கிராமத்தில் இலவச ஆயுர்வேத மருத்துவ முகாம் நடைபெற்றது. கயத்தாறு திருத்தொண்டு தள ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை ஜோமோன் மங்கலமடம் நிகழ்வை தொடங்கி வைத்தார். இதில் சுமார் 250 நோயாளிகள் கலந்து கொண்டு இலவசமாகப் பயன்பெற்றனர்.

### புனித அல்போன்சா திருவிழா கொண்டாட்டம்

நாகர்கோவில் புனித அல்போன்சா திருத்தல திருவிழா, 2023 ஜூலை 21 அன்று மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை. தோமஸ் பவத்துபறம்பில் அவர்களின் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. ஜூலை 28 அன்று, கோட்டார் மறைமாவட்ட முன்னாள் ஆயர் மேதகு பீட்டர் ரெமிஜியூஸ் அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார். கடைசி நாளாகிய ஜூலை 30 ஞாயிற்றுக்கிழமை இடுக்கி மறைமாவட்ட ஆயர் மார் ஜான் நெல்லிக்குன்னேல் அவர்கள் தலைமையில் ஆடம்பரத்திருப்பலி நடைபெற்றது. அன்றைய நாள் திருநிகழ்வுகளில் மறைமாவட்டத்தைச் சார்த்த ஏராளமான இறைமக்கள் கலந்து கொண்டனர். திருத்தல அதிபர் அருட்தந்தை சணல் பந்திச்சிறக்கல் மற்றும் திருத்தல துணை அதிபர் அருட்தந்தை ஜார்ஜ்குட்டி, ஆகியோர் விழா ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

# மறைவட்டச் செய்திகள்

## படந்தாலுமூடு

- **திருஇருதய மறைவட்ட ஆலயம் – படந்தாலுமூடு**

*03.07.2023 அன்று துக்ரானா திருநாளை முன்னிட்டு மாலை 6 மணிக்கு ஆடம்பரத் திருப்பலி நடைபெற்றது.*

*02.07. 2023 அன்று ஞாயிற்றுக்கிழமை திருப்பலிக்குப்பின் பின் பங்குத்தந்தை. தோமஸ் சத்யநேசன் அவர்களின் பெயர் கொண்ட விழா கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது.*

*07.07.2023 அன்று முதல் வெள்ளி சிறப்பு நற்கருணை ஆராதனை காலை 8 மணி முதல் 12 மணி வரை நடைபெற்றது. அன்று மாலை 6 மணிக்குத் திருப்பலியும் அதைத் தொடர்ந்து நற்கருணை ஆசிர்வாதமும் நடைபெற்றது.*

*22.07.2023 அன்று நடைபெற்ற புனித அல்போன்சா திருத்தல நடைபயணத்தில் சுமார் 60 பேரும், 30.07.2023 அன்று புனித அல்போன்சா திருத்தலத்திற்கு சுமார் 150 பேரும் கலந்து கொண்டனர்.*

*28.7.2023 அன்று புனித அல்போன்சம்மா திருநாளை முன்னிட்டு மாலை 5.30 மணிக்கு ஜெபமாலையும் அதை தொடர்ந்து 6 மணிக்குத் திருப்பலியும் நடைபெற்றது.*

- **தூய மரிய கொரற்றி ஆலயம் – அதன்கோடு**

*அதங்கோடு தூய மரிய கொரற்றி ஆலயத்தின் 43 ஆவது குடும்ப விழா 2023 ஜுலை மாதம் 5 முதல் 9 ஆம் நாள் வரை 5 நாட்கள் சிறப்பாக நடைபெற்றது. ஜூலை 5 அன்று மாலை 6.30 மணிக்கு பங்குத்தந்தை அருட்தந்தை ஆன்றணி மாடப்புரய்க்கல் அவர்கள் திருக்கொடியேற்றினார் தினமும் செபமாலை, திருப்பலி மற்றும் அன்பின் விருந்து நடைபெற்றது. முதல் இரு நாட்கள் நற்செய்தி பெருவிழாவும், இரண்டாம் நாளன்று பாதுகாவலியின் திருவிழாவும், மூன்றாம் நாளன்று மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துப்பறம்பில் அவர்கள் தலைமையில் இறந்தோர் நினைவு மற்றும் பங்கின் நிறுவனர் அமரர் அருட்தந்தை ஆண்றனி இளயச்சன்குளம் அவர்களின் நினைவு நாளும், நான்காம் நாளன்று திருப்பவனியும் நடைபெற்றன. நிறைவு நாளன்று காலை 10 மணிக்கு இராசைத் திருப்பலி, முதல் திருவிருந்து, அன்பின் விருந்து மற்றும் திருக்கொடி இறக்குதலும் நடைபெற்றன. மாலை*

7:00 மணிக்கு மறைக்கல்வி மற்றும் பக்த இயக்கங்களின் ஆண்டு விழாவும் சிறப்பிக்கப்பட்டது. விழா நிகழ்வுகளை திருவிழாக் குழுவினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

### புனித மத்தேயு ஆலயம் – அன்னிக்கரை

03.07.2023 அன்று புனித தோமையாரின் திருவிழாவை முன்னிட்டு மாலை 5.30 மணிக்கு செபமாலையும் அதைத் தொடர்ந்து திருப்பலியும் நடைபெற்றது.

28.07 .2023 அன்று புனித அல்போன்சா திருநாளை முன்னிட்டு மாலை 5.30 மணிக்கு ஜெபமாலையும் 6 மணிக்குத் திருப்பலியும் அதைத் தொடர்ந்து நேர்ச்சை விருந்தும் நடைபெற்றது.

23.07.2023 அன்று பங்குப்பேரவைக் கூட்டம் நடைபெற்றது. செப்டம்பர் மாதத்தில் நடைபெறவிருக்கும் திருவிழாவிற்கு திருவிழாக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

## தக்கலை – பிலாங்காலை

### புனித குழந்தை தெரசா மறைவட்ட ஆலயம் – பிலாங்காலை

2023 ஜூலை 2 ஞாயிற்றுகிழமை திருப்பலிக்கு பின் மணிப்பூர் மக்களுக்காக ஜெபமாலை ஜெபிக்கப்பட்டது. 5 ம் தேதி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்குதந்தை மற்றும் 20 நபர்கள் கலந்து கொண்டார்கள்.

ஜூலை 3 ம் தேதி துக்ரானா திருநாள் திருப்பலி மிக ஆடம்பரமாக கொண்டாடப்பட்டு நேர்ச்சை உணவு வழங்கப்பட்டது. புனித அல்போன்சம்மா திருவிழா 9 நாள் நவநாள் திருப்பலி 10 ம் நாள் திருப்பலி மற்றும் தேர்ப்பவனி ஆலயத்தில் இருந்து தொடங்கி அருட்சகோதரிகள் இல்லம் வரை நடைபெற்றது.



2 ம் சனிக்கிழமை நோயாளிகளுக்கான திருப்பலி மற்றும் ஆராதனை நடைபெற்றது. தாத்தா பாட்டி தினம் கொண்டாடப்பட்டது திருப்பலி முடிந்த உடன் முதியோர்களுக்கு உத்திரியம் வழங்கப்பட்டது. அனைத்து நிகழ்வுகளையும் பங்குதந்தை முன்னின்று நடத்தினார்.

- **புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம் – காட்டாத்துறை**

காட்டாத்துறை புனித மிக்கேல் அதிதூதர் ஆலயத்தில் வின்செந்தியர் அருட்தந்தையர்களால் பாப்புலர் மிஷன் தியானம் நடத்தப்பட்டது. 2023 ஜூலை மாதம் 9 முதல் 14 ஆம் தேதி வரை நடைப்பெற்றது. ஒப்புரவு அருளடையாளம், திருமுழுக்கு வாக்குறுதி புதுப்பித்தல், ஒளி வழிபாடு, நோயிலிருந்து விடுதலை, திருச்சிலுவை வழிபாடு, வெற்றிப்பவனி, திருமண வாக்குறுதி புதுப்பித்தல், முதலிய சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றது. அருட்தந்தையர்களால் அனைத்து வீடுகளும் சந்திக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டது. ஜூலை 13 அன்று மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துபறம்பில் அவர்கள் வருகை புரிந்து இறைச்செய்தி வழங்கினார்.

- **புனித ஜார்ஜியார் ஆலயம் ஆனையடி**

03.07.2023 அன்று துக்ரானா திருநாள் ஆடம்பரமாக கொண்டாடப்பட்டது. புனித தோமையர் உறவிய மக்கள் அன்றைய திருப்பலியை சிறப்பித்து சிற்றுண்டி வழங்கினார்கள். புனித அல்போன்சம்மா திருவிழா 28.07.2023 அன்று கொண்டாடப்பட்டது. திருப்பலிக்கு பின் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

ஜூலை 19 ம் தேதி அருட்சகோதரிகளின் புதிய கட்டிடம் அடிக்கல் நாட்டப்பட்டது. அருட்சகோதரி லில்லி SJSM முன்னிலை வகித்தார்கள். 22 ம் தேதி நடைபெற்ற அல்போன்சம்மா ஆலய நடைபயணத்தில் 15 நபர்கள் கலந்து கொண்டார்கள்.

## மஞ்சாலுமூடு

- **புனித தோமையார் ஆலயம் – முழுக்கோடு**

02.07.2023 முதல் 09.07.2023 வரை 8 நாட்கள் திருவிழா நடைபெற்றது. முதல் நாள் மாலை 4.45 மணியளவில் பங்குதந்தை அருட்தந்தை சந்தோஷ் கையாலபறம்பில் CMI அவர்கள் கொடியேற்றி தொடங்கி வைத்தார். 04.07.2023 அன்று மாலை ஆயர் அவர்கள் வருகை தந்து. ஆடம்பர திருப்பலி நிறைவேற்றி முதல் திருவிருந்து வழங்கினார்கள். 9.7.2023 அன்று இரவு தேர் பவனிக்கு பின் திருக்கொடி இறக்கப்பட்டு திருவிழா நிறைவு பெற்றது.

- **புனித பெனடிக் ஆலயம் – பென்கிரி**

15.72023 அன்று புனித பெனடிக் ஆலயம் பென்கிரி பங்கு இளைஞர்கள் இணைந்து ரோட்டோரமாக இருந்த ஏழைகளுக்கு உதவிகள் செய்தனர். 5.7.2023 முதல் 11.7.2023 ஆலயத்திருவிழா நடைபெற்றது.

- **திருக்குடும்ப ஆலயம் முக்கூட்டுகல்**

*26.7.2023 அன்று திருப்பலிக்கு பின் தாத்தா, பாட்டி தினம் கொண்டாடப்பட்டது.*



## களியல்

- **புனித மரியன்னை மறைவட்ட ஆலயம் – களியல்**

*புனித அல்போன்சா திருநாளை முன்னிட்டு மிஷன் லீக் மாணவர்கள் ஜூலை 22 மற்றும் 23 ஆகிய தேதிகளில் வீடு சந்திப்பு நடத்தினர். பங்கு மக்களிடமிருந்து செபக்குறிப்பு மற்றும் காணிக்கைகள் சேகரிக்கப்பட்டது. தொடர்ந்து ஜூலை 28 வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு திருப்பலியும் மறைக்கல்வி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் தலைமையில் சிறப்பு ஆராதனையும் நடைபெற்றது. பங்கு மக்களிடமிருந்து பெறப்பட்ட செபக்குறிப்புகள் சிறப்பாக செபிக்கப்பட்டது. ஜூலை 30 ஞாயிற்றுக்கிழமை திருப்பலிக்கு பின் மறைக்கல்வி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.*

- **இயேசுவின் திரு இருதய ஆலயம் – பள்ளிக்கோணம்**

*2023 ஜூலை 09 ஞாயிற்றுக்கிழமை அன்று மறைக்கல்வி மாணவர்களுக்கு "SPARK.Art of living" என்ற தலைப்பில் கருத்தரங்கு அருட்சகோதரி ரோசரி மற்றும் அருட்சகோதரி சூனா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாணவர்கள் மிகவும் உற்சாகமாக இக்கருத்தரங்கில் பங்கெடுத்தனர். மேலும் 'பெண்களின் தலைமைத்துவம்' என்ற தலைப்பில் மாதர் ஜோதிஸ் தாய்மார்களுக்கான ஒரு மணிநேர கருத்தரங்கு நடைபெற்றது.*



புனித அல்போன்சாவின் திருநாளை முன்னிட்டு ஜூலை 21 முதல் 28 வரை தினமும் மாலையில் ஜெபமாலை, திருப்பலியைத் தொடர்ந்து புனித அல்போன்சாவின் நவநாள் ஜெபம் நடைபெற்றது.

- **புனித சூசையப்பர் ஆலயம் – காரோடு**

புனித தோமையார் திருநாளான ஜூலை 3 தேதி மாலை 6.00 மணிக்கு பங்குத்தந்தை அருட்பணி ஜெஸ்டின் சுதீஷ் அவர்கள் தலைமையில் ஆடம்பர திருப்பலி நடைபெற்றது. இறுதியில் அன்பின் விருந்து நடைபெற்றது. அனைத்து ஏற்பாடுகளையும் புனித தோமையார் உறவிய மக்கள் செய்திருந்தனர்.

**துறவற நன்றித் திருப்பலி**

DSS துறவறச் சபையில் நித்திய வார்த்தைப்பாடு ஏற்ற அருட்சகோதரி அனிஷா DSS அவர்களின் நன்றித் திருப்பலி 2023 ஜூலை 05 அன்று காலை 10.00 மணியளவில் நடைபெற்றது. மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்த்தந்தை தோமஸ் பவத்துபறம்பில் திருப்பலி தலைமை தாங்கினார். களியல் மறைவட்ட முதன்மை பணியாளர் பேரருட்பணி தோமஸ் தெக்கத்தல CMI அவர்கள் மறையுரை வழங்கினார். ஆலய முன்னாள் பங்குதந்தையர்கள் முன்னிலை வகித்தனர்.

ஜூலை 23 ஞாயிற்றுக்கிழமை மூத்தோர் தினம் கொண்டாடப்பட்டது. ஆலயத்திற்கு வர முடியாதவர்களுக்காக வாகனம் ஏற்பாடு செய்யப்பட்டு சிறப்பு திருப்பலி நடைபெற்றது. திருப்பலிக்கு பின் குழந்தைகள் தாத்தா பாட்டிகளுக்கு வாழ்த்து கூறும் காணொலி திரையிடப்பட்டது. பின்னர் கேக் வெட்டி பரிசுகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வுகளை இளையோர்கள் தலைமையேற்று ஒருங்கிணைத்திருந்தனர்.



- **புனித இரண்டாம் ஜான் பால் ஆலயம் – குலசேகரம்**

2023 ஜூலை 30 நாகர்கோவில் அல்போன்சா திருத்தல திருவிழாவில் பங்கு மக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## சூசைபுரம்

- **புனித சூசையப்பர் மறைவட்ட ஆலயம் – சூசைபுரம்**

மார் தோமாவின் திருநாளை கொண்டாடும் விதமாக ஜூலை மாதம் 2 தேதி காலை திருப்பலிக்கு பின்னர் மறைக்கல்வி மாணவர்களால் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. பின் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

மார் தோமாவின் திருநாளான ஜூலை 3 தேதி மாலை 5:45 மணிக்கு பங்குத்தந்தை பேரருட்தந்தை ஆண்டனி ஜோஸ் அவர்கள் தலைமையில் சிறப்பு ஆடம்பர திருப்பலியானது நடைபெற்றது. இறுதியில் அன்பின் விருந்து நடைபெற்றது. அனைத்து ஏற்பாடுகளையும் புனித தோமையார் உறவிய மக்கள் செய்திருந்தனர்.

புனித அல்போன்சம்மாவின் திருநாளை முன்னிட்டு 20.07.2023 வியாழக்கிழமை முதல் 28.08.2023 வரை திருப்பலிக்கு பின்னர் புனித அல்போன்சம்மா சிறப்பு நவநாள் நடைபெற்றது.

புனித அல்போன்சம்மாவின் நினைவு நாளான 28.07. 2023 அன்று மாலை 5.45 மணிக்கு ஆடம்பர திருப்பலியானது பங்குத்தந்தை தலைமையில் நிறைவேற்றப்பட்டது. திருப்பலிக்குப் பின்னர் புனித அல்போன்சா உறவிய இறை மக்கள் நேர்ச்சை அப்பம் வழங்கினர்.

புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் அருட்தந்தை மைக்கேல் ஆரோக்கியசாமி அவர்களின் பிறந்த நாள் விழா 26.07.2023 அன்று காலை 6.15 மணிக்கு திருப்பலிக்கு பின்னர் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. பங்குத்தந்தை அவர்கள் சிறப்புரையாற்றி பரிசு வழங்கினார்கள். மேலும் பங்கு மக்கள் வாழ்த்து பாடல் பாடி தந்தை அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்து கூறினர்.

- **புனித வியாகப்பர் ஆலயம் – மாங்கரை**

02.07.2023 அன்று திருப்பலிக்கு பின் அருட்தந்தை டோஜி தலைமையில் திருப்பணியாளர் கூட்டமும் 2.30 மணிக்கு பங்கு பேரவை மற்றும் திருவிழா குழுவினர் கூட்டமும் நடைபெற்றன.

03.07.2023 அன்று மாலை 5.30 மணிக்கு ஆடம்பர திருப்பலி தோமையார் உறவிய மக்களின் காணிக்கை பவனியும் இறுதியில் இனிப்பும் வழங்கப்பட்டன.

*05.07.2023* அன்று மாலை 5.30 மணிக்கு பங்குதந்தை தலைமையில் திருப்பலியும் அதைத்தொடர்ந்து ஜெபமாலை பவனியும் மணிப்பூர் மக்களுக்காக நடத்தி ஒப்புக்கொடுக்கப்பட்டன.

ஆலய திருவிழாவை முன்னிட்டு இளையோர்கள் சார்பாக மறைமாவட்ட அளவிலான கிரிக்கெட் போட்டி ஆலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. 19 அணிகள் கலந்து கொண்டனர் அருட்தந்தை சாஜன் அவர்கள் துவங்கி வைக்க இறுதியில் மறைவட்ட முதன்மை பணியாளர் பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

*9.7.2023* கல்லுவிளை புனித தோமையார் உறவிய ஆண்டுவிழா அருட்தந்தை டோஜி தலைமையில் நடைபெற்றது.

*21.7.2023* முதல் *30.7.2023* வரை ஆலயத் திருவிழா நடைபெற்றது. *24,25,26,27* நாட்களில் நற்செய்தி பெருவிழா, பாவசங்கீர்த்தனம், நற்கருணை ஆராதனை நடைபெற்றன. *29.7.2023* அன்று பேரருட்தந்தை. ஆன்றணி ஜோஸ் தலைமையில் மாணவர்களுக்கு புதுநன்மையும், உறுதிபூசுதலும் வழங்கப்பட்டது.

- **தூய தேவமாதா ஆலயம் – கிள்ளியூர்**

*03.07.2023* அன்று தூய தோமையார் உறவிய மக்கள் பாதுகாவலர் விழாவைக் கொண்டாடினர். அருட்தந்தை மேத்யூ தெக்கேகுற்று அவர்களால் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. இறுதியில் தூய தோமையார் உறவிய மக்கள் அனைவருக்கும் இனிப்பு வழங்கினார்கள். *20.7.2023* அன்று பங்குத்தந்தை தலைமையில் பங்குப் பேரவைக் கூட்டம் நடைபெற்றது.

*15.07.2023* அன்று தூய சகாய மாதா உறவிய மக்கள் பாதுகாவலர் விழாவைக் கொண்டாடினர். பங்குத்தந்தை சாஜன் அவர்களால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. தொடர்ந்து அன்பின் விருந்து நடைபெற்றது. *16.07.2023* அன்று சீறோ மலபார் திருச்சபையின் பணியும் வாழ்வும் என்ற தலைப்பில் தக்கலை மறைமாவட்ட மாமன்றத்தை முன்னிட்டுள்ள கலந்தாய்வு உறவியங்கள் வாயிலாக நடைபெற்றது.

*28.07.2023* ஆண்டு தூய அல்போன்சா உறவிய மக்கள் பாதுகாவலர் விழாவை கொண்டாடினர். பங்குத்தந்தை சாஜன் அவர்களால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. தொடர்ந்து அன்பின் விருந்து நடைபெற்றது.

- **கிறிஸ்து அரசர் ஆலயம் – பாலப்பள்ளம்**

ஜூலை *2* ஞாயிற்றுகிழமை திருப்பலியைத் தொடர்ந்து ஆலயம் முதல் பாலப்பள்ளம் வரை மணிப்பூர் மக்களுக்காக ஜெபமாலைப்

பவனி நடைபெற்றது. 3 ஆம் தேதி துக்கரானா திருநாள் ஆலயத்தில் சிறப்பாக திருப்பலியோடு அனுசரிக்கப்பட்டது. தொடர்ந்து மறைக்கல்வி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. நிறைவில் அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டது.

5 ஆம் தேதி மணிப்பூர் மக்களுக்காக நாகர்கோவிலில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திலும் பங்கிலிருந்து திரளான மக்கள் அருட்தந்தை அஜின் ஜோஸ் அவர்கள் தலைமையில் கலந்து கொண்டனர்.

ஜூலை 16 ஆம் தேதி புனித தோமையார் உறவிய ஆண்டு விழா நடைபெற்றது. பங்குத்தந்தை தலைமையில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளோடு நடைபெற்ற விழாவில் சிறப்பு விருந்தினராக முன்னாள் பங்குத்தந்தை அருட்தந்தை ஜாண்பால் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

ஜூலை 20 முதல் 28 வரை அனைத்து நாட்களும் திருப்பலியும் புனித அல்போன்சா நவநாள் செபமும் நடைபெற்றது. புனித வின்சென்ட் தே பவுல் சபை மற்றும் மரியாயின் சேனை உறுப்பினர்கள் தலைமையில் ஆலய கெபியில் தினமும் மாலையில் நோயாளிகளுக்கான சிறப்பு ஜெபமாலை நடைபெற்றது.

ஜூலை 23 ஞாயிற்றுக்கிழமை காலை திருப்பலியை தொடர்ந்து தாத்தா பாட்டிகள் தினம், ஒலிம்பிக்கில் மூன்றாவது இடம் பிடிக்க வைத்த ஜோதி நிலைய சிறப்பு பள்ளி முதல்வர் அருட்சகோதரி லின்ஸ் அவர்களுக்கு பாராட்டு, பங்கில் பணியாற்றி மாற்றம் பெற்று செல்லும் தலைமை அருட்சகோதரி எலிசபெத் அவர்களுக்கு பிரியாவிடை ஆகிய முப்பெரும் விழாக்கள் நடைபெற்றது.



*28 ஆம் தேதி புனித அல்போன்சம்மாள் நினைவு நாள் பங்கில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.*

*மணிப்பூர் மக்களின் அமைதிக்காக கருங்கலில் ஜூலை 31 இல் நடைபெற்ற கண்டன பேரணி மற்றும் ஆர்ப்பாட்டத்திலும் பங்கிலிருந்து சுமார் 100க்கும் அதிகமான மக்கள் பங்கேற்றனர்.*

- **பாத்திமா அன்னை ஆலயம் – பாத்திமாபுரம்**

*26.7.23 அன்று திருப்பலிக்கு பின் அருட்சகோதரி ஆன்சிட் அவர்களின் பெயர் கொண்ட திருவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.*



*27.7.23 அன்று தாத்தா பாட்டி தினம் கொண்டாடப்பட்டது. பங்குதந்தை அருட்தந்தை ஆன்றனி ஜோஸ் அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார். அனைத்து பேரக்குழந்தைகளும் தாத்தா பாட்டிக்கு பரிசுகள் வழங்கி மகிழ்ந்தனர்.*

**தகவல் சேகரிப்பு : திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா, திருமதி ஷைலா | மெரின் சுஜித்**

---

# *தென்காசி மறைத்தள செய்திகள்*

தென்காசி மறைத்தளத்திலுள்ள புளியரை, புதூர், மேக்கரை மற்றும் சுந்தரபாண்டியபுரம் ஆகிய இடங்களிலிருந்து அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள், மற்றும் இறைமக்கள் அனைவரும் இணைந்து ஜூலை 30 அன்று நாகர்கோவில் புனித அல்போன்சாவின் திருத்தலத்திற்கு திருப்பயணம் மேற்கொண்டு திருவிழா திருப்பலியிலும், திருப்பவனியிலும் கலந்து கொண்டனர்.

# MONTHLY AGENDA – AUGUST 2023

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Tue | 9.00 am<br>11.00 am | KKSSS: Governing Body Meeting at KKSSS, Kalluvilai<br>KKSSS: Annual General Body Meeting |
| 4 | Fri | 09.00 am | Vianney day celebration at Minor Seminary, Mukkuttukal |
| 6 | Sun | 02.00 am | SMYM: Half Day Seminar at Kalluvilai |
| 9 | Wed | 9.00 am<br>2.00 pm | KKSSS: Quarterly Visit from CRS India team to KKSSS<br>Tenkasi Mission Meet at Pudur Border |
| 10 | Thu | 09.00am | Practice of New Tamil Taksa for Priests at Sangamam |
| 11 | Fri | 09.00am | FA : Marriage Prepration course |
| 12 | Sat | 09.00 am<br>09.00 am | St. Alphona Academy Cultural Competitions for Schools and Colleges at Nagercoil<br>FA : Marriage Prepration course |
| 13 | Sun | 02.00 pm | CML : General Body meeting at Kalluvilai |
| 15 | Mon | | *New Taksa Implementation in the Diocese* |
| 15 | Mon | 9.30 am<br>9.30 am | KII : Diocese level Online Fancy dress Competition<br>SMYM: Feast day Celebration & Competition, Thuckalay-Plankalai Forane at Plankalai |
| 16 | Tue | 09.00am | KKSSS: Educare Class |
| 19 | Sat | 09.30 am | KKSSS: Medical Camp at Orunooramvayal<br>SINAI : One day convention - Soosaipuram Forane at Soosaipuram |
| 20 | Sun | 9.00 am<br>2.00 pm | St. Vincent De Paul Annual Day celebrations at Mukkoottukal<br>St. Alphona Academy Award Day at Nagercoil |

| | | | |
|---|---|---|---|
| 25 | Fri | 9.00 am | KKSSS : Changing the Way We Care Project Asia Director visit to KKSSS |
| 26 | Sat | 2.00 pm<br>4.00 pm | SINAI : One day convention at Retreat Center, Kalluvilai<br>SMYM: Onam Celebration, Padanthalumoodu Forane at Padanthalumoodu<br>PULARI : Health care awareness program at Senkottai |
| 27 | Sun | 2.00 pm<br>4.00 pm | MJ : Bible Verse writing Competition<br>PULARI : Health care awareness program at Senkottai |
| 31 | Thu | 9.00 am | KKSSS : Medical Camp at Palugal |

**Fr.Thomas Powathuparampil, Protosyncellus**

## BISHOP'S ENGAGEMENTS - AUGUST 2023

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 - 17 | | | US Visit |
| 18 - 19 | | | CHAT meeting at Pondicherry |
| 20 | Sat | 10.00 am<br>2.00 pm | Feastday Mass at Plankarai<br>St. Alphonsa Academy Award Day at Nagercoil |
| 21 - 26 | | | Syro Malabar Bishops' Synod at Kakkand |
| 27 | Sun | | Sneha Villa, Moolamattom |
| 28 | Mon | | Sneha Villa, Moolamattom |
| 29 - 31 | | | Thuckalay, Bishop's House |



St. Benedict's Church, Bengiri
Parish Feast, 11.07.2023



St. Maria Goretti Church, Athencode
Parish Feast, 05.07.2023



St. Paul's Church, Thettiyode
Parish Feast, 02.07.2023



St. Alphonsa Nadaipayanam, SMYM, 22.07.2023



Pulari Social Service Society, Piranoor, Tenkasi
World Grandparents' Day, 23.07.2023



Mathar Jothis, Margam Kali, Competition
Padanthalumoodu, 29.07.2023

---

For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570